# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 30 திங்கட்கிழமை (13-03-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:92


## யுத்தத்தை உடன் நிறுத்தி நியாயமான தீர்வை ஏற்படுத்தக் கோரிப் பேரணி!

### 25ஆம் திகதி யாழ்.நகரில் நடத்துவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்13

தற்சமயம் நடைபெறும் யுத்தத்தை உடன் நிறுத்தி தமிழ் மக்களுக்கு நீதியான நியாயமான தீர்வை வழங்கவேண்டும் என்று கோரி மாபெரும் அமைதிப் பேரணி ஒன்று எதிர்வரும் 25ஆம் திகதி யாழ். நகரில் நடைபெறுவுள்ளது.

யாழ். வை.எம்.சி.ஏ.கட்டடத்தில் நேற்று நடந்த கூட்டம் ஒன்றில் இந்தப் பேரணி தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் ஏற்பாட்டில் நடந்த இந்தக் கூட்டத்தில் பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் 25ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி முன்றலில் இந்தப் பேரணி ஆரம்பித்து யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் முடிவடையும்.

சமாதானத்தை வலியுறுத்தும் வகையிலான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் யாழ். அரச அதிபர் மற்றும் செஞ்சிலுவை சர்வதேசக் குழு அதிகாரி ஆகியோருக்கு அன்று கையளிக்கப்பட இருக்கின்றது. இந்தப்பேரணியில் வலியுறுத்தப்படவுள்ள கோரிக்கைகள் வருமாறு:-

★ தமிழ் மக்கள் சமாதானமாக வாழ யுத்தத்தை உடன் நிறுத்த வேண்டும்.

★ சம்பந்தப்பட்ட தரப்பினர் சமாதானப் பேச்சுகளில் ஈடுபட

(12ஆம் பக்கம் பார்க்க)

## இறந்தோரை அடையாளம் காண நவீன சட்ட வைத்தியப் பரிசோதனை

கொழும்பு,மார்ச்13

ராஜகிரிய காஸில் வீதி குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த விடுதலைப் புலிகளை அடையாளம் காண்பதற்காக நவீன சட்டவைத்தியபரிசோதனை முறைகள் பயன்படுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தாக்குதல்களில் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் நான்கு விடுதலைப் புலிகளின் சடலங்கள் தற்பொழுது பொலீஸார் வசம் உள்ளன.

இருப்பினும் இவை நேரடியாக அடையாளம் காணமுடியாதவாறு உருக்குலைந்துள்ளதால் நவீன இரசாயன சட்ட வைத்திய முறைகளை உபயோகிப்பதன் மூலம் சடலங்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# கொழும்பு நகரப் பகுதியின் பாதுகாப்பு குறித்து ஆராய்வு!

## விசேட திட்டம் ஒன்றை அமுல் செய்ய முடிவு

கொழும்பு, மார்ச் 13

**இராஜகிரிய காஸில் வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தாக்குதலை அடுத்து கொழும்பையும் அதன் சுற்றுப்புறங்களையும் பாதுகாப்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது. கொழும்பையும் அதன் சுற்றுப் புறங்களையும் பாதுகாக்க விசேட திட்டம் ஒன்று அமுல் செய்யப்படவுள்ளது.**

இராணுவத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த உயர்மட்ட மாநாட்டிலேயே இது குறித்து முடிவு செய்யப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளால் கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் கடந்த காலங்களில் நடத்

(12ஆம் பக்கம் பார்க்க)

### மேலும் ஒருவர் மரணம்

கொழும்பு,மார்ச்13

இராஜகிரிய காஸில் வீதியில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

இவருடன் உயரிழந்தவர்களின் எண்ணிக்கை 29ஆக உயர்ந்தது. இதேவேளை படுகாயமடைந்த ஒன்பது பேர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என கொழும்பு தேசிய வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஹெக்டர் வீரசிங்க தெரிவித்தார். (இ-க-7)

### சம்பவ இடத்துக்கு இராணுவ தளபதி

இராஜகிரிய காஸில் வீதியில் குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற இடங்களுக்கு இராணுவத்தளபதி ஸ்ரீலால் வீரசூரிய மற்றும் பொலீஸ் மாஅதிபர் லக்கி கொடித்துவக்கு ஆகியோர் சனியன்று விஜயம் செய்தனர்.


இப்பொழுது.....

உதயன்

இணையப் பதிப்பு

அனைத்துலகிலும் வாழும் தமிழ் மக்கள் வாசிக்கலாம்.

இணைய முகவரி :

www.uthayan.com


## தப்பியோரைக் கண்டுபிடிக்க தீவிர தேடுதல் நடவடிக்கை

### இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 13

இராஜகிரிய காஸில் வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் போது தப்பிச் சென்றவர்களைக் கண்டுபிடிக்க தீவிர தேடுதல் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் குறித்து புலனாய்வுத் தகவல் கூட எமக்குக் கிடைக்கவில்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலை அடுத்து 16 தமிழர்கள் கைது!

கொழும்பு,மார்ச்13

இராஜகிரிய காஸில் வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக தெகிவளை, புறக்கோட்டை, ஆகிய இடங்களைச் சேர்ந்த பதினாறு தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

வடக்கைச் சேர்ந்த இவர்கள் தாக்குதலுக்கு உதவியிருந்ததாக கிடைத்த தகவலின் பேரிலேயே கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர் என்று குற்றத்தடுப்பு பணியகத்தின் பணிப்பாளர் பந்துல விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்தத்தாக்குதல் தொடர்பாக பலரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. அந்த வாக்குமூலங்கள் மூலம் பல விடயங்கள் தெரியவந்துள்ளன என்றும் அவர் சொன்னார். (இ-க-3)

## பாடசாலைகளில் அமைந்துள்ள படை முகாம்கள் அகற்றப்படும்!

### வடக்கு - கிழக்கு ஆளுநர் இணக்கம்

கொழும்பு,மார்ச்13

வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகளில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் மற்றும் பொலீஸ் காவல் நிலையங்கள் ஆகியவற்றை அங்கிருந்து அகற்றுவதற்கு வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளார் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த வெள்ளியன்று கொழும்பில் உள்ள மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஆளுநருடனான சந்திப்பில் இது தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைகளிலும், பாடசாலைகளுக்கு அண்மையிலும் படையினரின் சோதனை நிலையங்கள் இருப்பது மாணவர்கள் உளரீதியாகப் பாதிப்படைவதற்குக் காரணம் என தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆளுநரின் கவனத்துக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலி உறுப்பினர் ஒருவரின் சடலம் செஞ்சிலுவை மூலம் ஒப்படைப்பு

திருகோணமலை, மார்ச்13

திருகோணமலை அன்புவழிபுரம் பகுதியில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவரின் சடலம் செஞ்சிலுவை சர்வதேசக் குழு மூலம் நேற்று விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

மூதூர் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் சடலத்தைப் பொறுப்பேற்றனர் என திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை மேற்படி மோதலில் இடையில் சிக்கி உயிரிழந்த குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று திருகோணமலை ஆஸ்பத்திரியில் வைத்து இனங்காணப்பட்டது.

திருகோணமலை - உப்புவெளிப் பகுதியைச் சேர்ந்த சித்திரவேலு இராஜேஸ்வரன்(வயது22) என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் என அவரது மனைவியான கோமதி அடையாளம் காட்டினார்.

இந்தக் குடும்பஸ்தரின் சடல

(12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தக் கைதிகள் பற்றி பேச்சு நடத்த அரச பிரதிநிதி வன்னி செல்வார்!

### ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் நடவடிக்கை

கொழும்பு,மார்ச்13

யுத்தக்கைதிகளின் விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த தகுதியான அதிகாரி ஒருவரை அனுப்புமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நீதி அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தத் தகவலை நீதி, அரசமைப்பு, தேசிய நல்லிணக்க பிரதி அமைச்சர் டிலான் பெரேரா வெளியிட்டுள்ளார்.


ஜனாதிபதியின் உத்தரவை அடுத்து தகுதியான ஒருவரை அங்கு அனுப்ப நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

யுத்தக்கைதிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த சமயம் புதுக்குடியிருப்புக்குச் சென்ற அவர்களின் உறவினர்கள் மூலம் அரசுக்கு விடுதலைப் புலிகள் தகவல் ஒன்றை அனுப்பியிருந்தனர்.

யுத்தக்கைதிகளை விடுவிக்க தமது தரப்பு நிபந்தனை தொடர்பாகப் பேச்சு நடத்த அரசு ஒரு பிரதிநிதியை வன்னிக்கு அனுப்பவேண்டும் என்று அந்தத் தகவலில் புலிகள் தெரிவித்திருந்தனர்.

இதனை அடுத்து அரசுத்தரப்பில் தகுதியான பிரதிநிதி ஒருவரை அனுப்ப நீதி, அரசமைப்பு விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-3)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01 - 01 - 1922

மறைவு
23 - 02 - 1999

**அமரர் சின்னையா நல்லையா**
(ஆறாம் வட்டாரம், மண்டைதீவு)

**திதி: 13-03-2000 (பூர்வபட்ச அட்டமி)**

நெஞ்சம் நொந்து
நீள்விழி நீர் சொரிய
ஓராண்டு கடந்ததையா!
உங்கள் உயிர்ப்பில்
உலவி வரும் எம் இதயம் - நின் பிரிவால்
இசைக்கின்ற முகாரிக்கு
விதி என்ற ராகமென்றார் - முற்றுணர்ந்தோர்.
உலகமாயை இதுவென்றே
உணர்த்தும் தில்லைக் கூத்தன்
திருவடியில் எந்நாளும் இருந்து
எமைக் காப்பாய் - ஐயனே!

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*இல.17, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(74424)

## ராஜா

யாழ்ப்பாணம்
ரசிகர்களே!
சூப்பர்ஸ்ரார் ரஜனிகாந்த்,
சௌந்தர்யா,
நடிகர்திலகம் மற்றும் பலர்
நடித்த
**படையப்பா**
காட்சிகள்
10.30, 2.00, 5.00
(C/11349)

## நாகம்ஸ்

சுன்னாகம்
அஜித், சிம்ரன்
நடித்த
**அவள் வருவாளா?**
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(C/11282)

## லிபேட்டி

அச்சுவேலி
சரத்குமார், ரோஜா
நடிப்பில்
**சூரியன்**
காட்சிகள் – 10.30, 2.30
T.P : 070-212223
070-212678
*Fax No:- 0094 - 70212223*
(74391)

## கனேடிய தூதரகத்தின்

அனுசரணையுடனான

# பல்துறைசார் குழு

**உளநலத்துறையில் ஈடுபடும் மேற்படி குழுவினருக்கான விண்ணப்பங்கள் யாழ்ப்பாண உள நல சங்கத்தினால் கோரப்படுகின்றன.**

- இந் நியமனங்கள் யாவும் இருவருடகாலத்திற்குரியவை.
- விரும்பப்படும் கல்வித்தகைமையாக க.பொ.த(உ/த) கருதப்படும்.
- துறைசார் தகைமைகள், அனுபவங்கள் உடையவர்களின் விண்ணப்பங்கள் விசேடமாக பரிசீலிக்கப்படும்.
- இப் பல்துறைசார் குழுவினர் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை, யாழ்.போதனா வைத்தியசாலை என்பவற்றிலும், யாழ்.குடாநாட்டிலுள்ள பல்வேறு சமூக மட்டங்களிலும் பணிபுரியும்படி எதிர்பார்க்கப்படுவர்.
- பொருத்தமான விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.
- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு துறைசார் பயிற்சிகள் வழங்கப்படும்.
- இக்குழுவில் அதிக பெண்கள் பங்கு கொள்வதை கனேடிய தூதுவராலயம் வரவேற்கின்றது.

| பதவி | விரும்பப்படும் மேலதிக தகைமைகள் | மாதாந்த ஊக்குவிப்புப் படி |
|---|---|---|
| உள மருத்துவ சமூக சேவையாளர் (2) | ■ இத்துறைசார் கல்வி ■ சமூகப் பணிகளில் அனுபவம் | 3,500/= |
| சாந்த வழிமுறை சிகிச்சையாளர் (3) | ■ யோகாசனம் தொடர்புடைய பயிற்சியும் செயற்பாடுகளும் | 3,500/= |
| பொது உளவளத்துணையாளர்(5) | ■ உளவளத்துணையில் பயிற்சியும் அனுபவமும் | 3,000/= |
| குழந்தை உளவளத்துணையாளர்(2) | ■ இயல்பாக குழந்தைகளுடன் பழகும் தன்மை ■ பாலர் விளையாட்டுச் சித்திரம் என்பனவற்றில் பரிச்சயம் | 3,000/= |
| குடும்ப உளவளத்துணையாளர் (2) | ■ குடும்ப உளவளத்துணையில் பயிற்சியும் அனுபவமும் | 3,000/= |
| மது மருந்துத் துர்ப்பாவனை உளவளத்துணையாளர்(2) | ■ இது சார்ந்த பயிற்சியும் அனுபவமும் | 3,000/= |
| நாடகவழிச் சிகிச்சையாளர்(1) | ■ நாடகமும் அரங்கியலும் கல்வி ■ நாடக அனுபவங்கள் | 4,000/= |
| தொழில்வழிச் சிகிச்சையாளர்(3) | ■ பலதரப்பட்ட தொழிற்பயிற்சிகளில் அறிவும் அனுபவமும் | 2,500/= |
| இயன்சிகிச்சை உதவியாளர்(2) | ■ பாரம்பரிய மருத்துவம், தசைகளைப் பிடித்துவிடுதல் சார்ந்த அறிவும் அனுபவமும் | 3,000/= |

மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற, இயல்பாகவே உளப் பாதிப்படைந்தவர்களுடன் பழகி சிகிச்சையளிக்கக் கூடிய குணநலப் பண்புகள் கொண்ட விண்ணப்பதாரிகள், தமது சுயவிவரத்திரட்டு அடங்கிய விண்ணப்பத்தினைக் கீழ்காணும் முகவரிக்கு 24.03.2000க்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

**செயலாளர்**
உளநல சங்கம்
மாவட்ட வைத்தியசாலை,
தெல்லிப்பழை.

(11380)

*யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின்*
*2000 ஆம் ஆண்டுக்கான*

## பொதுக்கூட்டம்

மேற்படி பாடசாலையின் 2000ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டம் 24.03.2000 வெள்ளிக்கிழமையன்று மேற்படி பாடசாலையில் நடைபெறும் என்பதனை பெற்றோர், நலன் விரும்பிகள், பழையமாணவர்கள் யாவருக்கும் அறியத்தருவதுடன் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(74388) *- அதிபர்*

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**அகஸ்ரின் அருளப்பு**
(முன்னாள் அதிபர், சென்.ஜோசப் வித்தியாலயம்)

மலர்வு
02-11-1922

உதிர்வு
13-02-2000

அன்பும் கருணையும் அருங் குணம் பலவும்
கொண்டே குடும்பம் சிறந்திடக் காத்த
எங்கள் குலத்தின் தெய்வமே உங்களை
என்றும் மனமெனும் கோயிலில் வைத்துள்ளோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்.

55, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்
பாஷையூர்.

(74345) தகவல் : எமில்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
11-01-1979



மறைவு
12-02-2000

**இரவீந்திரன் சுரேஸ்குமார்**
(முதலாம் ஆண்டு மாணவன், மருத்துவபீடம்)

புன்னகை சிந்தி நீ பல்கலை வந்ததும்
பூத்த மலரென நெஞ்சினில் நின்றதும்
கண்ணசைவினில் கதைகள் பேசியே
கனிந்த பேச்சினால் எம்மைக் கவர்ந்ததும்
முன்னிரு பாடம் கற்று முடித்ததும்
முதன்மையாய் நீ சித்திகள் பெற்றதும்
எண்ணிடும் போதினில் இல்லையென்றானதே
எங்களின் நெஞ்சம் இன்னும் வேகுதே
உன்னரும் நண்பர் உடனிருக்கையில்
உயிரை மாய்த்திடும் எண்ணமும் வந்ததேன்?
கண்ணினில் வழிவதைக் காணிக்கையாக்கியே - உன்
காலடிச்சுவட்டினைக் கருத்தினில் வைக்கிறோம்.

*மருத்துவபீடம்.* (74421) - 21ஆம் அணி மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

**ச.அருளம்பலகுமாரசூரியர்**

இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த ச.அருளம்பலகுமாரசூரியர் (இளைப்பாறிய பிரதம பொறியியலாளர்) நேற்றுமுன்தினம் (11.03.2000) சனிக்கிழமை இரவு கொழும்பில் காலமானார்.

அன்னார் வள்ளியசுந்தரியின் அன்புக் கணவரும் இரத்தினகுமாரசூரியர் (கனடா), இராசகுமாரசூரியர் (லண்டன்), பாலகுமாரசூரியர் (கனடா), காலஞ்சென்ற ஜெயகுமாரசூரியர், சூரியகுமாரி (கொழும்பு), சூரியகலா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள்மதி (கனடா), சுபாஷினி (லண்டன்), Dr. ஆனந்தராசா (கொழும்பு தேசிய வைத்தியசாலை), முருகானந்தம் (கனடா) ஆகியோரின் மாமனாரும் சாந்தகுமார் (கனடா), சாந்தினி (கனடா), ஆனந்தகுமார் (கொழும்பு) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
சு.திருப்பரங்கிரிநாதன்

கொழும்பு முகவரி:
*15, எட்வேட் ஒழுங்கை,*
*கொழும்பு - 03*
*T.P: 596848*

(74429)

# செய்திக் கொத்து

## மலசலகூட கட்டட வேலை பூர்த்தி

திருநெல்வேலி, மார்ச் 13

உரும்பிராய் இந்துக்கல்லூரியில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இரு மலசல கூடங்களினதும் இரு சல கூடங்களினதும்கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இவ் வேலைகளுக்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் சுமார் 4 லட்சம் ரூபாவையும் கல்லூரிச் சமூகம் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தொகையையும வழங்கியுள்ளன.

இம் மலசலகூட கட்டடங்கள் விரைவில் திறந்து வைக்கப்படவிருப்பதாக கல்லூரி அதிபர் அ. ஈஸ்வரநாதன் தெரிவித்தார்.

(ஐ-135)

## கூட்டம்

நெடுந்தீவு, மார்ச் 13

நெடுந்தீவுக்கான அபிவிருத்தி குறித்து பிரதேச சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் ஈ.பி.டி.பி. அமைப்பின் தீவகப் பொறுப்பாளர் என். மதனராஜா கடந்த வெள்ளிக்கிழமை விசேட கூட்டம் ஒன்றை நடத்தினார்.

இக்கூட்டத்தில் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்து பிரதேச சபைத் தலைவரும் உறுப்பினர்களும் அவருக்கு விளக்கிக் கூறினர்.

(ஐ-111)

## சொத்து இழப்பீடு

நெல்லியடி, மார்ச் 13

அண்மைக்காலவன் செயலினால் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் வீடுகளை இழந்தவர்களுள் சுமார் 11 பேருக்கு அசையும் அசையாச் சொத்து இழப்பீடாக மொத்தம் 10 லட்சத்து 49 ஆயிரத்து 200 ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.

1500ரூபாவுக்குமேல்வருமானம் பெறுபவர்களுக்கே இக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

(ஐ-109)

## மந்திகை ஆஸ்பத்திரியில் பல் டாக்டர்

நெல்லியடி, மார்ச் 13

மந்திகை மருத்துவமனையின் பற்சிகிச்சைப் பிரிவுக்கு மேலும் ஒரு பல் வைத்தியர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி, இக்கத்தைச் சேர்ந்த டாக்டர் வி. ஜெயராஜா என்பவரே சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-109)

## கிளைக் குழுத் தேர்தல்

வலி.கிழக்கு, மார்ச் 13

வலி.கிழக்கு வடபகுதி அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இச்சங்கத்தின் 22கிளைக் கடைகளுக்குரிய கிளைக் குழுத்தேர்தல்களையேஅந்தந்தக் கிளைகளில் நடத்த ஒழுங்குகள்செய்யப்பட்டுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

(ஐ-180)

## முகாமைக்குரு நியமனம்

நெல்லியடி, மார்ச் 13

பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபைக்குமேலும ஒரு பெண் முகாமைக் குரு நியமிக்கப்பட்டுள்ளார்.

அருட்திரு. ஜெயா- ரட்ணசிங்கம் என்பவரே இம் மாதம் முதலாம்திகதியிலிருந்து,கொழும்பு தலைமை நிலையத்தினால் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

(ஐ-109)

## ரவை மா விநியோகம்

வலி. கிழக்கு, மார்ச் 13

வலி. கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் பாவனையாளர்களுக்கு கிலோ 25 ரூபா வீதம் ரவைமாவழங்கப்பட்டு வருகின்றது.

யாழ். குடாநாட்டில் வெளிச்சந்தையில் ரவைமா கிலோ 40 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

சங்கத்தில் தேவையான அளவுரவைமாவினை பாவனையாளர்கள் பெற்றுக் கொள்ளலாம். என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ - 180)

## பதில் கடமை

நெல்லியடி, மார்ச் 13

மந்திகை மருத்துவமனையின் பற்சிகிச்சைப் பிரிவின் பல் வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி திருமகள் இராஜேஸ்வரன், வாரத்தில் இரு நாள்கள் வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில் பதில் கடமை செய்ய, சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

(க-109)

## பனங்கிழங்கு அறுவடை

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 13

புன்னாலைக்கட்டுவன், ஈவினை பிரதேசங்களில் பனங்கிழங்கு அறுவடை செய்யப்பட்டு வருகின்றது.

பனங்கிழங்குகளை விவசாயிகள் சந்தைப்படுத்துவதுடன் ஒடியல், புழுக்கொடியல் போன்றவற்றையும் தயாரித்து வருகின்றனர்,

(க-133)

## காரைநகரில் வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஈழத்துச் சிதம்பரத்திற்குச் செல்லும் வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

நீண்டகாலமாகச் சேதமடைந்திருந்த இந்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு இப் பகுதி மக்கள், வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து, ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர்களான ,டக்ளஸ் தேவானந்தா, கே. வி. குகேந்திரன், (ஜெகன்) ஆகியோரின் நிதி ஒதுக்கீட்டில், இவ்வீதி புனரமைக்கப்படுகின்றது.

(ஐ - 109)

# ஊரெழு முகாமில் வைத்துத்தம்மை தாக்கியதாக இளைஞர்கள் புகார்

## வைத்திய சிகிச்சை அளிக்க நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 13

கோண்டாவில், உரும்பிராய் ஆகிய பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டு ஊரெழு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட சமயம் தாங்கள் கடுமையாகத் தாக்கப்பட்டதாக இரு இளைஞர்கள் யாழ். நீதிமன்றத்தில் பிரஸ்தாபித்தனர்.

இதைத் தொடர்ந்து பிரஸ்தாப இரு இளைஞர்களையும் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்கு அனுமதித்து அறிக்கை பெறுமாறு யாழ். பதில் நீதிவான் எம். திருநாவுக்கரசு யாழ். சிறைச்சாலை ஆணையாளருக்கு உத்தரவிட்டார்.

காங்கேசன் தடுப்பு முகாமிலிருந்து கடந்த வியாழனன்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சின்னத்துரை விஜயரூபன் (உரும்பிராய் கிழக்கு), தம்பிரத்தினம் ரஜீகாந்தன் (கோண்டாவில்) ஆகிய இரு இளைஞர்களே தமக்கு நேர்ந்த நிலை குறித்து நீதிவானிடம் பிரஸ்தாபித்தனர்.

பிரஸ்தாப இளைஞர்கள் கைது செய்யப்பட்ட சமயம் அவர்களிடம் கைக்குண்டு இருந்ததாகவும் —

விடுதலைப்புலிகள் தொடர்பான தகவல் தெரிந்தும் இவர்கள் அது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தவில்லை என்றும் —

பொலீஸார் தரப்பில் கூறப்பட்டது.

பிரஸ்தாப இளைஞர்களை வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்திய பின்னர் அடுத்த மாதம் 10 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(உ-3-9)

## கைதடி முதியோருக்கு ஆடைகள்

கொழும்புத்துறை, மார்ச் 13

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் 230 முதியவர்களுக்கும் எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் புத்தாடைகளை வழங்கி உள்ளார்.

அதிபர் திருமதி இராசேஸ்வரி துரைரத்தினத்திடம் இவை அன்பளிப்பாகக் கையளிக்கப்பட்டுள்ளன.

(ஐ-30)

## நாடகப்பட்டறை

புன்னாலைக் கட்டுவன், மார்ச் 13

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் உள்ள ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான நாடகப் பட்டறை மூன்று தினங்களுக்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் 19ஆம் 20ஆம் திகதிகளில் இப்பட்டறை நடைபெறும்.

பல்கலைக்கழக விரிவுரையாளர் குழந்தை ம. சண்முகலிங்கம் தலைமையிலான நாடகமும் அரங்கியலும் துறைசார்ந்த ஆளணியினர் பயிற்சி வழங்குவர்.

இதில் கலந்து கொள்ளும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா கேட்டுள்ளார்.

(க-133)

## தாயும் மகளும் விடுவிப்பு

தென்மராட்சி, மார்ச் 13

கடந்த 8 ஆம் திகதி விசாரணைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்ட சாவகச்சேரியைச் சேர்ந்த தாயும் மகளும் கடந்த வியாழனன்று காலை விடுவிக்கப்பட்டனர்.

சாவகச்சேரி தாமோதரம் பிள்ளை வீதியைச் சேர்ந்த கார்த்திகேசு இராசம்மா அவரது மகளான கார்த்திகேசு சசிகலா ஆகியோர் அன்று காலை பலாலியிலிருந்து இரகசியப் பொலீஸாரால் அழைத்துவரப்பட்டு சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பின் விடுவிக்கப்பட்டனர்.

(ஐ - 117)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 13

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீசிவகாமி அம்பாள் ஆலய பங்குனி உத்தர இலட்சார்ச்சனையும், விசேட திவ்விய ஹோமமும் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

தொடர்ந்து பத்து நாள்கள் இலட்சார்ச்சனை இடம் பெறும். (க-15)

★ ★ ★

நீர்வேலி, மார்ச் 13

நீர்வேலி வாய்க்கால் கரவைப் பிள்ளையார் ஆலய இலட்சார்ச்சனை கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 தினங்கள் இலட்சார்ச்சனை இடம் பெறும், (க-110-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 13

அளவெட்டி வடக்கு ஐயனார் கோயில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-10-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 13

வண்ணை ஸ்ரீவீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பங்குனி குளிர்த்தி அபிஷேகம் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாக உள்ளது.

(க-10)

★ ★ ★

நீர்வேலி, மார்ச் 13

சுன்னாகம்ஐயனார்கோயில் வருடாந்த மகோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(க-110-30)

★ ★ ★

கொழும்புத்துறை, மார்ச் 13

கொழும்புத்துறை மேற்கு புங்கன்குளம் வீதி அருள்மிகு ஸ்ரீவில்வையம்பதி நாகபூஷணி அம்பாள் கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகிபன்னிரண்டு தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு அபிஷேகம், பூசைகளும், நேர்த்திக் காவடிகள், பால் செம்பு நிகழ்வுகளும் அடியார்களால் நடத்தப்படும்.

(ஐ-30)

# தென்மராட்சியில் பரவும் சின்னமுத்து நோய்

## தடுப்பு நடவடிக்கை தீவிரம்

தென்மராட்சி, மார்ச் 13

தென்மராட்சி, பச்சிலைப் பள்ளி ஆகிய பிரதேசங்களில் சின்னமுத்து நோய் பரவி வருகிறது. இதனைக் கட்டுப் படுத்த சாவகச்சேரி சுகாதார பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பளைப் பிரதேசத்தில் தர்மக்கேணிப் பகுதியில் சின்னமுத்து நோய் பரவி வருவதாக பளைப் பகுதிப் பொதுச் சுகாதாரப்பரிசோதகர் க. கர்ணன் முறைப்பாடு செய்ததையடுத்து சாவகச்சேரி பதில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். யமுனானந்தா தலைமையில் சுகாதாரப் பிரிவினர் அப்பகுதிக்குச் சென்று சின்னமுத்து நோயினால் பீடிக்கப்பட்டிருந்த 15 நோயாளர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கினர்.

தற்போது நிலவும் கொடூர வெயிலின் தாக்கத்தினால் இந் நோய் வேகமாகப் பரவும் அபாயநிலை காணப்படுவதால் இந் நோயின் அறிகுறி காணப்படின் உடனடியாக அவ்வப்பகுதிச் சுகாதார அலுவலர்களுக்கு அறிவிக்குமாறு சாவகச்சேரி பதில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

இதேவேளை—

இப் பிரதேசங்களில் சின்னமுத்து நோயினைக் கட்டுப் படுத்தும் பொருட்டு ஒன்பது மாதம் முதல் பத்து வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு சின்னமுத்து தடுப்பு மருந்து விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## இறால் கருவாடுக்கு கிராக்கி

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 13

குடாநாட்டில் அண்மைக் காலமாக இறால் பிடிக்கப்படுவது அதிகரித்துள்ளதால் அவற்றை உப்பிட்டு உலர்த்தி வற்றலாக்கி பைக்கற்றுக்களில் அடைத்து வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர்

தென்பகுதிக்குச் செல்லும் மக்களும் லீவில் செல்லும் படையினரும் இவற்றினை விரும்பி வாங்கிச் செல்கின்றனர். (ஐ-133)

## மாணவன் வீடு திரும்பினார்

விளையாட்டுப் போட்டி பார்க்கச் சென்ற வேளையில் காணாமல் போனதாகக் கூறப்பட்ட சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவன்இராசரத்தினம் தற்பரன் (வயது16) கடந்த வெள்ளியன்று வீடு திரும்பியுள்ளார்.

திருநெல்வேலியில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்ததாகவும் பத்திரிகையில் செய்தி வெளியாகியதைக் கண்டு அவர் வீடு திரும்பிய தாகவும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

# பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான தகைமை பெற்றவர்களிடமிருந்து 2000 ஏப்ரல் 07 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பல்கலைக்கழக மருத்துவ அலுவலர்.**

சம்பள அளவுத்திட்டம்: ரூபா 11.500 — 10 x 375, 10 x 475 — 20,000/- மாதம் ஒன்றுக்கு.

தகைமைகள்: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் மருத்துவப் பட்டத்துடன் மருத்துவராக குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் அனுபவம்.

வயது; 45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு: நேர்முகப் பரீட்சை மூலம்

குறிப்பு: கல்வித் தகைமைகள், சேவை அனுபவம் ஆகியனவற்றைக் கவனத்தில் கொண்டு ஒப்பந்த, பகுதிநேர (இடைவரவு) அடிப்படையிலான நியமனம் செய்யப்படலாம்.

**2. பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தரம் II**

சம்பள அளவுத்திட்டம்: ரூபா 6460 — 10 x 110; 7 x 130 — 8470/- மாதம் ஒன்றுக்கு.

தகைமைகள்: சுகாதாரத் திணைக்களத்தினால் நடத்தப்படும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தேர்வில் சித்தியடைந்து தகைமை பெற்றதன் பின்னர் குறைந்த பட்சம் மூன்றாண்டு அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது: 45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு: உளச்சார்பறி தேர்வு. நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம்.

**3. மருந்தாளர் (தாழ்தரம்)**

சம்பள அளவுத்திட்டம்: ரூபா 6460 — 10 x 110; 7 x 130 — 8470/- மாதம் ஒன்றுக்கு.

தகைமைகள்: இலங்கை மருத்துவ அவையால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை பெற்ற மருந்தாளருக்கான தகுதிச் சான்றிதழ்.

வயது: 45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது

தெரிவு: உளச்சார்பறி தேர்வும் நேர்முகப் பரீட்சையும்.

**4. பொதுச் சுகாதாரத் தாதி**

சம்பள அளவுத்திட்டம்:
ரூபா 7165—19x130—9635/- மாதம் ஒன்றுக்கு.

தகைமைகள்:

1) (அ) இலங்கை மருத்துவ அவையால் அங்கீகரிக்கப்பட்ட தகுதிச் சான்றிதழுடன் தாதியாக 12 ஆண்டு அனுபவத்தையும் அதில் 8 ஆண்டுகால அனுபவத்தை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் மாணவ சுகாதார சேவையில் அல்லது பொதுச் சுகாதார சேவையில் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இலங்கை மருத்துவ அவையால் அங்கீகரிக்கப்பட்ட தகுதிச் சான்றிதழுடன் தாதியாக 10 ஆண்டு அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன் நலம் பேணும் அம்சங்களில் ஏதாவதில் முதனிலைக்குப் பிந்திய தகைமைகளைக் கொண்டிருத்தல்.

வயது: 45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு: உளச்சார்பறி தேர்வு. நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம்.

குறிப்பு: பொதுச் சுகாதாரத் தாதி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர், மருந்தாளர் ஆகிய பதவிகளுக்கு மீளப் பதவியில் சேர்த்துக் கொள்வதற்கு ஓய்வு பெற்ற அலுவலர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களும் கவனிக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/- ரூபாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கியில் அல்லது இப்பல்கலைக்கழகச் சிறாப்பரின் முகப்பு மேசையில் செலுத்தி இப்பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்தில் பெறக் கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதில் நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/-ரூபாகாசுக் கட்டளையுடன்/தபாற் கட்டளையுடன் 23x10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்டு 3.50சத முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும். அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவன் தலைவர் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவில்லாமல் விவரங்கள் அளிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**– பதிவாளர்.**

யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
2000-03-09

(சி/11369)

# அகதிகளுக்கான ஐ.நா.தூதரக நிதியில் பாஷையூரில் மீன்பிடிப் படகுத்துறை

## 23 லட்சம் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 13
பாஷையூர் கடலில் மீன்பிடி படகுத்துறை ஒன்று அகதிகளுக்கான ஐ. நா. தூதரக நிதி உதவியுடன் நிறுவப்பட்டு வருகின்றது.

சுமார் 23 லட்சம் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட உள்ள இந்த மீன்பிடித் துறையின் கட்டுமான வேலைகள் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மேற்பார்வையில் இடம்பெற்று வருகின்றது.

இந்த திட்டம் கடந்த 1999 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது பாஷையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த நிர்மாண வேலைகள் அந்தப் பிரதேசத்தில் அண்மைக் கலாமாக நிலவிவந்த அசாதரண சூழ்நிலை காரணமாக தடைப்பட்டிருந்தன.

எனினும் 2 ஆயிரமாம் ஆண்டில் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்தத் திட்டம் யாழ். அரச அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க கூட்டுறவுச் சங்க சமாசத்தினரிடம் நிர்மாண வேலைகள் ஒப்படைக்கப்பட்டதாக சமாச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த மாத இறுதிக்குள் படகுத்துறை வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-9)

## 40 சதவீத உருளைக்கிழங்கு அறுவடை

யாழ்ப்பாணம், மார்ச் 13
யாழ். குடாநாட்டில் 41.5 ஹெக்டேயரில் பயிரிடப்பட்ட உருளைக்கிழங்கில் தற்பொழுது 40 சதவீதம் அறுவடை செய்யப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏப்ரல் மாதத்தின் நடுப்பகுதி வரையும் குடாநாட்டின் தேவைக்குப் பயன்படும் வகையில் மிகுதி அறுவடை நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-10-5)

## தலைமைத்துவப் பயிற்சி நெறி

தென்மராட்சி, மார்ச் 13
பளைப் பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தினர் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் பிரதேச இளைஞர் கழகங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர், அமைப்பாளர் ஆகியோருக்கான தலைமைத்துவப்பயிற்சி நெறியினை இன்று முதல் 3 தினங்களுக்கு பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க கூட்டுறவு மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

பளை இளைஞர் சேவைகள் அலுவலர் மு. வரதராசா தலைமையில் நடைபெறும் இப்பயிற்சி நெறி ஆரம்ப விழாவுக்கு முதன்மை விருந்தினராகப் பளைப் பிரதேச சபைச் செயலாளர் இ. ந. பாலச்சந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் ரி. சிவதட்சணாமூர்த்தி, முகாவில் அ. த. க பாடசாலை அதிபர் என். ஜீவரத்தினம். பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் க. கணேசலிங்கம், சம்மேளனக் காப்பாளர் ஆ. கேதீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ஐ-117)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை கால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459
(74401)


# சாஸ்திரம் சொல்வதாகக் கூறி சிறுமியின் தோடுகள் அபகரிப்பு

## ஏமாற்றுப் பேர்வழிகள் சிக்கினர்

தென்மராட்சி, மார்ச். 13
சாஸ்திரம் சொல்வதாகக் கூறி வீடுகளுக்குச் செல்லும் போலிச் சாமியார்கள் வீடுகளில் பொருள்களை அபகரிப்பதுடன் தனித்து இருப்போரை ஏமாற்றித் திருட்டுக்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

பளை, புலோப்பளைப் பகுதிகளில் இத்தகைய ஏமாற்றுப் பேர்வழிகள் அண்மைக்காலமாக நடமாடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளியன்று புலோப்பளையில் உள்ள வீடு ஒன்றுக்குச் சென்ற இரு ஏமாற்றுப் பேர்வழிகள் அங்கு தனிமையில் இருந்த சிறுமி ஒருத்திக்கு சாஸ்திரம் சொல்வதாகக் கூறி அச்சிறுமி அணிந்திருந்த தோடுகளை அபகரித்துக்கொண்டு தப்பிச்சென்ற வேளை அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் அவர்களைத் துரத்திச்சென்று கச்சாய் வெளிப் பகுதியில் வைத்து வழிமடக்கிப் பிடித்து பளைப் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இவர்கள் இருவரும் மற்றொரு வீட்டில் இருந்து கத்தி ஒன்றையும் அபகரித்துச் சென்றமை தெரியவந்துள்ளது. (ஐ-117)

# நியந்த்ரீயின் 3 ஆம் ஆண்டு நிறைவை யொட்டி போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 13
நியந்த்ரியின் மூன்றாவது ஆண்டு நிறைவையொட்டி சைவசமய அறிவுப்போட்டி, வைதிக ஆகம அறிவுப் போட்டி, கோலப் போட்டி என்பன நடைபெறவுள்ளன.

நடைபெறவுள்ள வைதிக ஆகம அறிவுப்போட்டியில் சிவாச்சார்யார்களும் மற்றைய இரண்டு போட்டிகளில் ஆர்வமுள்ள அனைவரும் பங்கு பற்றலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துப் போட்டிகளுக்குமான வினாப்படிவங்களை 10 ரூபா செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் அத்துடன் கோலப்போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை 15 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பும் ஏனைய இரண்டு போட்டிகளுக்குமான விடைகளை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பும் செயலர் நியந்த்ரீ, சிவன்கோயில், நல்லூர் எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்குமாறு செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் ஆண்டு விழா நிகழ்வில் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# 15ஆவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 27 — 04 — 1971

உதிர்வு; 13 — 03 — 1985

## அமரர் துரைசிங்கம் சரவணன்துரை

(யா/அச்சுவேலி மகாவித்தியாலய மாணவன்)

ஆண்டு பதின்நான்கு ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்—நின்
மதிமுகம் மறைந்தபோதும்
மாறவில்லை உன் நினைவு.

அப்பா, அம்மா
பெரியம்மா குடும்பத்தினர்

திருச்செந்தூர்
நாவலம்பதி,
அச்சுவேலி.

(சி/11370)

# அமெரிக்க அதிகாரி கொசோவோ செல்வார்

நியூயோர்க், மார்ச் 13

அமெரிக்க வெளிவிவகாரத் துறைப் பேச்சாளர் ஜேம்ஸ் ரூபினை கொசோவோவுக்கு அனுப்புவதற்கு வெளியுறவுத் துறைச் செயலர் மெடலின் ஆல்பிறைட் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கொசோவோவின் மிட்ரோவிக்கா மாவட்டத்தில் அல்பேனியர்களுக்கும் சேர்பியர்களுக்கும் இடையிலான முறுகல் நிலையைத் தீர்க்கும் பொருட்டு இரு இனத்தலைவர்களுடனும் பேச்சு நடத்துவதற்காகவே ஜேம்ஸ் ரூபின் அங்கு செல்லவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது அவர் நேட்டோப் படையினர், கொசோவோப் படையினர், அல்பேனியத் தலைவர்கள் ஆகியோரையும் சந்தித்துப் பேசுவார்.

(ஐ - 6 - 5)

## உலக அரங்கில்

# சட்டத்தரணி சுட்டுக்கொலை

இஸ்லாமாபாத், மார்ச் 13

பாகிஸ்தானில் பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் சட்டத்தரணி இக்பால் ராக்கும் அவரது உதவியாளர்கள் இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்தவெள்ளியன்று கராச்சியில் இடம் பெற்றது.

கார் ஒன்றில் வந்த நான்கு பேர் கொண்ட குழுவே இத்தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ—க)

# மூலிகைப் பெற்றோல் மோசடி: இராமர்பிள்ளை கைதானார்!

சென்னை, மார்ச் 13

தமிழ்நாட்டில் மூலிகைகளில் இருந்து பெற்றோல் தயாரித்ததாக நீண்ட காலமாகக் கூறிவரும் இராமர்பிள்ளை நேற்று முன்தினம் இந்திய மத்திய புலனாய்வுக் குழுவினால் (சி. பி. ஐ.) கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் வாகன எரிபொருள் என்று தெரிவித்துத் தொல்லியல் இரசாயனப் பொருள்களை விற்றுப் பொது மக்களை ஏமாற்றிய குற்றத்திற்காக இவர் கைது செய்யப்பட்டார்.

இராமர்பிள்ளையின் இல்லம், களஞ்சியம், மூலிகை எரிபொருள் என்று கூறப்பட்ட இரசாயனப் பொருள்கள் விற்கப்பட்ட இடங்கள் ஆகியவற்றில் சி. பி ஐ. திடீர் சோதனைகளை நடத்தியது. இதனை அடுத்தே இராமர் பிள்ளை கைது செய்யப்பட்டார்.

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றிலிருந்து 'பென்சீன்' என்ற இரசாயனப் பொருளைக் கடத்தி அதனுடன் வேறு சில மூலிகைப் பொருள்களையும் சேர்த்து மூலிகைப் பெற்றோல் என்று இராமர்பிள்ளை விற்று வந்ததாகக் கூறப்படுகின்றது

இவரால் தயாரிக்கப்பட்ட இந்த எரிபொருள் மோட்டார் வாகனங்களின் 'எஞ்சின்களை' விரைவில் பழுதடையச் செய்துவிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

1996 ஆம் ஆண்டு சில மூலிகைளின் உதவியுடன்தான் மூலிகைப் பெற்றோல் தயாரித்து விட்டதாக இராமர்பிள்ளை அறிவித்தார். எனினும் இவரது இந்த முயற்சிக்கு அதிக வரவேற்பு அளிக்கப்படவில்லை.

பின்னர்நாள்ஒன்றுக்குஒரு லட்சம் லீற்றர் மூலிகைப் பெற்றோல் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை ஆரம்பித்துள்ளதாக இராமர்பிள்ளை அண்மையில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(ஐ-6-5)

# இந்தியாவுடன் ராணுவப் பகைமை கிடையாது என்கிறார் சீனத்தூதர்!

புதுடில்லி, மார்ச் 13

இந்தியாவுடன் இராணுவ ரீதியிலான பகைமையோ பொருளாதாரப் போட்டியோ தனக்கு இல்லை என்று சீனா தெரிவித்துள்ளது.

உலகில் ஒரே வல்லரசு ஆதிக்கம் செலுத்தும் நிலை தோன்றும் இந்த வேளையில் கூட்டுறவு நிலைக்கு இந்திய — சீனா உறவுகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று இந்தியாவுக்கான சீனத் தூதர் ஸோ ஹாங் கூறினார்.

பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவிடம் இருந்து சீனாவுக்கோ சீனாவிடம் இருந்து இந்தியாவுக்கோ அச்சுறுத்தல் எதுவும் இல்லை. எனினும் இரு நாடுகளுக்கும் வேறு இடத்தில் இருந்துதான் அச்சுறுத்தல் ஏற்படுகின்றது.

சீனா இந்தியாவை ஒரு போதும் தனது எதிரியாகவோ, அதன் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான நாடு என்றோ கருதவில்லை. கடந்த மாதம் பெய்ஜிங்கில் முதல் தடவையாக நடைபெற்ற இந்திய சீனப் பாதுகாப்புப் பேச்சுக்கள் மூலம் இரு நாடுகளும் ஒன்றை ஒன்று நன்கு புரிந்து கொண்டு நம்பிக்கையை வளர்க்க முடியும்.

இந்தியாவுடன் நீண்ட காலத்துக்கான உறவுகளையே சீனா விரும்புகின்றது. இந்திய — சீனத் தூதரகங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பொன் விழாக் கொண்டாட்டங்களை முன்னிட்டு 40 ஆண்டுகளாகப் பகைமை பாராட்டிவந்தஇந்திய—சீன படைஅதிகாரிகள் அடுத்த மாதம் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் மூன்று இடங்களில் கை குலுக்கிக் கொள்வார்கள்.

அதே சமயம் — இந்திய — சீன உறவுகளுக்கு திபெத்திய ஆன்மீகத் தலைவர் கர்மபாலாமா விவகாரம் பாதிப்பை ஏற்படுத்தாமல் இந்திய அரசு பார்த்துக் கொள்ள வேண்டும்.

கர்மபாலாமாவின் விவகாரத்தை சிலர் அரசியலாக்கி அதன் மூலம் தமக்கு இலாபம் தேடிக் கொள்ள முயன்று வருகின்றனர்.

இவ்வாறு சீனத் தூதர் மேலும் தெரிவித்தார். (ஐ-6-5)

# மொரீஷியஸில் வாஜ்பாய்க்கு டாக்டர் பட்டம்

போட்லூயிஸ், மார்ச் 13

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு மொரீஷியஸ் நாட்டின் போர்ட் லூயிஸில் உள்ள மொரீஷியஸ் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

உத்தியோக பூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு வாஜ்பாய் மொரீஷியஸ் தீவுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

அவரது இந்த விஜயத்தைக் கௌரவிக்கும் முகமாகவும் அவரது நீண்டகால அரசியல் சேவையைப் பாராட்டியும் அவருக்கு இந்தப் பட்டத்தை மொரீஷியஸ் பல்கலைக் கழகம் வழங்கி உள்ளது.

கௌரவ டாக்டர் பட்டத்தை பெருமையுடன் பெற்றுக் கொண்ட வாஜ்பாய் அங்கு உரையாற்றினார்.

இதேவேளை —

ஐ. நா பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை வேண்டும் என இந்தியா வலியுறுத்திவரும் கோரிக்கைக்கு மொரீஷியஸ் ஆதரவு தெரிவித்துள்ளது. [ஐ-6-5]

# சிலி நாட்டில் புதிய அதிபர் பதவியேற்பு

சன்டியாகோ, மார்ச் 13

சிலி நாட்டின் புதிய அதிபராக நிக்காடோ லாகோஸ் பதவி ஏற்றுள்ளார்.

1973 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த சால்வடோர் அலன்டேயை பதவியில் இருந்து இராணுவம் இறக்கிய பின்னர் முதன் முறையாக சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தஒருவர் அதிபராக பதவியேற்பது இதுவே முதல் தடவையாகும்.

சிலியின்சர்வாதிகாரி ஜெனரல் பினோசே லண்டனில் இருந்து அண்மையில் நாடு திரும்பிய போது இராணுவம் அவருக்கு அளித்த வரவேற்பினால் இராணுவத்துக்கும் அரசுக்கும் இடையிலான உறவுகள் பாதிப்படைந்துள்ள நெருக்கடியான நேரத்தில் நிக்காடோ லாகோஸ் அதிபராகப் பதவியேற்றுள்ளார்.

பினோசே மீது நாட்டில் தொடரப்பட்டுள்ள பல வழக்குகள் மீதான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் போது நிக்காடோ மீதான இராணுவத்தின் அழுத்தங்கள் அதிகரிக்கும் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ஐ-6-5)

# இந்திய விற்பன்னர் தபேலா வாசித்து உலக சாதனை

புதுடில்லி, மார்ச் 13

இந்தியாவின் பிரபல தபேலாக் கலைஞர் விங்கு ஆதர்ஷ் தபேலா வாசிப்பதில் புதிய உலக சாதனை ஒன்றை நிகழ்த்தி உள்ளார்.

தொடர்ந்து — இடைவிடாமல் — 21 மணி நேரம் விங்கு ஆதர்ஷ் தபேலா வாசித்து இந்தச் சாதனையை நிலை நாட்டி உள்ளார்.

பட்னாவைச் சேர்ந்த ஆதர்ஷ் புதுடில்லியின் மத்திய பூங்காவில் இருந்தவாறு இந்தச் சாதனையை உலகுக்கு நிகழ்த்திக் காட்டினார்.

இந்தச் சாதனை உலக அதிசயங்கள் இடம்பெறும் ஏடான கின்னஸ் புத்தகத்திலும் இடம்பெற உள்ளது.

இதற்கு முன்னர் ஜப்பானைச் சேர்ந்த வியூ பெர்ணாண்டஸ் 20 மணித்தியாலங்கள் இடைவிடாமல் 'ட்ரம்ஸ்' வாசித்து சாதனை நிகழ்த்தி இருந்தார். (ஐ-6-5)

# ரஷ்ய அதிபர் தேர்தலில் புடினுக்கு வெற்றி வாய்ப்பு

## கருத்துக்கணிப்பில் முடிவு

மொஸ்கோ, மார்ச் 13

நடைபெற உள்ள ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய பதில் அதிபர் விளாடிமிர் புடின் வெற்றி பெறுவார் என்று கருத்துக் கணிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ரஷ்யப் பத்திரிகை ஒன்று இந்தக் கருத்துக் கணிப்பை நடத்தியது. 59 சத வீதமான பொதுமக்கள் அதிபர் புடினுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். புடினின் முக்கிய போட்டியாளரான கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருக்கு 25 சதவீதமானோரே ஆதரவு தெரிவித்துள்ளனர்.

# மிக ஆபத்தான இடம் காஷ்மீர்ப் பகுதியாம்!

## கிளின்ரன் தெரிவிப்பு

நியூயோர்க், மார்ச் 13

இந்தியாவின் காஷ்மீர் மாநில எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியே உலகிலேயே மிகவும் ஆபத்தான இடம் என்று அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

வாஷிங்ரனில் உலக மதத் தலைவர்கள் மத்தியில் உரையாற்றும் போது கிளின்ரன் இவ்வாறு கூறினார்.

இந்தியாவுக்கான விஜயத்தை ஆரம்பிக்க இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில் கிளின்ரன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

கிளின்ரனின் இக்கருத்து இந்தியாவுக்குவிசனத்தை ஏற்படுத்தி உள்ளது. அமெரிக்க அதிபரின் கருத்தை இந்தியா ஒரு போதும் ஒப்புக்கொள்ளாது என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங் தெரிவித்தார். காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்தியா அமெரிக்காவின் கருத்துக்கு மாறுபாடான கருத்தைக் கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

(ஐ-6-5)

# புதிய அரசு பெரும்பான்மையை 10 நாள்களில் நிருபிக்கவேண்டும்

புதுடில்லி, மார்ச் 13

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் புதிதாகப் பதவியேற்றுள்ள ராப்ரிதேவி தலைமையிலான ராஷ்ட்டிரிய ஜனதாதள் அரசு எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் தனது பெரும்பான்மையை சட்டமன்றத்தில் நிரூபிக்க வேண்டும் என்று ஆளுநர் எச்.பாண்டே கேட்டுள்ளார்.

முன்னதாக தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசில் முதலமைச்சராக இருந்த நித்தீஸ்குமார் கடந்த வெள்ளிக்கிழமை நம்பிக்கை வாக்கெடுப்பை நாடுவதற்கு சற்றுமுன்னர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

இதனை அடுத்து ஆளுநர் எச். பாண்டே ராப்ரி தேவியை அரசமைக்க வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். அதை ஏற்றுக்கொண்ட ராஷ்ட்டிரிய ஜானதாதள் கட்சியைச் சேர்ந்த அமைச்சரவை நேற்று முன்தினம் ராப்ரிதேவி தலைமையில் பதவியேற்றது.

பதவியேற்ற 10 நாள்களுக்குள் ராப்ரிதேவி அரசு தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று ஆளுநர் கோரி உள்ளார். இது வரை தனக்கு 162 உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாக ராப்ரிதேவி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் மற்றும் பகுஜன் சமாஜ் கட்சி ஆகியன ராப்ரி தேவியின் அரசுக்கு ஆதரவு வழங்கி வருகின்றன.

322 உறுப்பினர்களைக் கொண்ட பீஹார் சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிருபிப்பதற்கு 163 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவை. (ஐ-6-5)

# சந்திரனுக்கு இந்திய விண்கலம்

புதுடில்லி, மார்ச் 13

இந்திய தேசிய விண்வெளி நிறுவனம் சந்திரனுக்கு விண்கலம் ஒன்றை அனுப்புவது குறித்து ஆராய்ந்து வருவதாக நிறுவனப் பணிப்பாளர் எஸ். கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

ஆனால் இந்தத் திட்டத்துக்கு அரசு இன்னும் அனுமதி வழங்கவில்லை என்றும் அவர் கூறினார்.

# வடக்கு - கிழக்கில் படை விலகலை

# அரசு ஒருபோதும் ஏற்கக் கூடாது

'பெரமுன' சிங்களப் பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரையின் தமிழாக்கம் இது.

காரின் பின் டிக்கிக்கு வெளியே இரண்டு ''வயர்'' துண்டுகள் வெளியே தொங்கிக் கொண்டிருந்தன. அந்த வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருந்தவர்களில் கொழும்பிலுள்ள சர்வதேசப் பாடசாலையில் பயிலும் தமிழ் மாணவி ஒருத்தியும் இருந்தாள். வீதிச் சோதனைச் சாவடியில் வாகனத்தை நிறுத்துமாறு கட்டளை பிறந்தது. பயணிகளின் அடையாள அட்டைகள் மற்றும் ஆவணங்களை சிப்பாய் ஒருவர்சோதனையிட்டார். தமிழ் மாணவியை வாகனத்தில் இருந்து இறங்குமாறு பணித்த சிப்பாய் மாணவியின் கைப்பையைச் சோதனையிடுவதற்கு பெண் சிப்பாயை அழைத்தார். மாணவியின் கைப்பைக்குள் ஏதோ வாசனைத் திரவியம் மாத்திரமே இருந்தது. இதற்கிடையில் காரின் பின் டிக்கிக்கு வெளியே தொங்கிக் கொண்டிருந்த ''வயர்'' துண்டுகள் சிப்பாயின் கவனத்தை ஈர்த்தன. அதைத் தொடர்ந்து பிரயாணிகள் அனைவரும் வாகனத்திலிருந்து இறக்கப்பட்டு வாகனம் பரிசோதிக்கப்பட்டது.

பழைய பத்திரிகைகள், வெற்றுப் போத்தல்கள் வாங்கும் கடைக்குக் கொடுப்பதற்காகச் சேர்த்து வைக்கப்பட்ட பொருள்கள் டிக்கிக்குள் இருந்தன. டிக்கிக்குள் இருந்த சாவிப் பெட்டியில் இருந்த வயர்த் துண்டுகளே தெரியும்படியாக வெளியே தொங்கிக் கொண்டிருந்தன. அந்த 'வயர்கள்' பெட்டியுடன் தொடுக்கப்பட்டிருந்தன எனச் சிப்பாய் எண்ணினார்.

''உடனடியாக இங்கிருந்து போங்கள். தயவு செய்து இங்கே குண்டை வெடிக்க வைக்க வேண்டாம். நான் இரண்டு பிள்ளைகளுக்குத் தகப்பன். வேறு எங்காவது போய்க் குண்டை வெடிக்க வையுங்கள்'' என்று சிப்பாய் கூவினார். வாகனத்தில் வந்தவர்கள் உடனடியாக வாகனத்தில் ஏறிப் புறப்பட்டனர்.

ஒரு வாகனத்தில் குண்டு இருக்கிறது எனில் நிலைமை எப்படியிருக்கும்? வீதிச்சோதனைச் சாவடிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கு குண்டுகள் பற்றியோ குண்டுதாரிகள் பற்றியோ அல்லது அவ்வாறான வேளைகளில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றியோ போதிய அறிவாற்றலில்லை. மேற்கூறப்பட்ட சம்பவம் பாதுகாப்புப் பிரிவில் உயர் மட்டத்தில் இருப்பவர்களுக்குக் கூட இதுபற்றிய போதிய அறிவு இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

சிப்பாய் ஒருவருக்கு அவரைப் பணியில் ஈடுபடுத்த முன்னர்மூன்று மாதப் பயிற்சி மட்டுமே வழங்கப்படுகிறது. அதன்போது உடற்பயிற்சி தொடர்பான பயிற்சிகளே வழங்கப்படுகின்றன. ஆனால் உளஉறுதி தொடர்பான பயிற்சிகள் அவற்றில் அடங்குவதில்லை.

''படையினரின் உளஉறுதி பற்றிக் கவனம் செலுத்தப்படுகிறது. ஆனால் அதுபற்றித் திவிரமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை' என வடபகுதி நடவடிக்கை கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் நீல் டயஸ் தெரிவிக்கிறார்.

கிழக்கு மாகாணத்திலும் ஒரு சம்பவம் இடம்பெற்றது. அங்கு பொலீஸ்காரர் ஒருவருக்கு பணிக்கப்பட்ட கடமை என்னவெனில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏதாவது விதத்தில் தொடர்புகள் உள்ளனவா என்பதைக் கண்டறிவதாகும். அந்தப்பொலீஸ்காரர் தொடர்புகள் உள்ளனவா என்பதைக் கண்டறிவதற்குப் பதிலாக கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களை விடுவிப்பதற்காக அவர்களின் உறவினர்களிடமிருந்து பணம் பெற்றுள்ளார். இந்தப் பொலீஸ்காரரால் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகள் வைத்திருந்த இருவர் விடுதலை செய்யப்பட்டனர். மேலும் அவர்கள் பற்றிய விவரங்களைக் கூட அந்தப் பொலீஸ்காரர் பதிவேடுகளில் பதியவில்லை.

பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த ஒருவர் நாட்டுக்காக யுத்தத்தில் பங்குபற்றித் தன்னுயிரைத் தியாகம் செய்கிறார். மறுபுறத்தில் மற்றொருவர் யுத்தத்தை வியாபாரமாக்குகிறார்.

மேலே கூறப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளுடன்தொடர்பு கொண்டிருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த நான்கு சிப்பாய்கள் வவுனியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்படின் அவர்கள் இராணுவ நீதி மன்றத்தினால் தண்டிக்கப்படுவார்கள். எனினும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை இராணுவத்தால் மேற்கொள்ள முடியுமா என்பதே கேள்வி. இதேவேளை இராணுவத்துக்கு புதிதாக ஆள்களைத் திரட்டும் முயற்சிகள் எதிர்பார்த்த பயனை அளிக்கவில்லை. அரசியல்வாதிகளிடமிருந்து போதிய ஒத்துழைப்புக் கிடைக்காமையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்துக்குப் புதிதாக ஆள்களைச் சேர்க்கும் முயற்சிகள் ஒரு புறத்தில் பயனளிக்காத வேளையில் மறுபுறத்தில் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட கால எல்லைக்குள் படையில் இருந்து தப்பியோடிய சிப்பாய்களில் மூவாயிரம் பேர் மீண்டும் படையில் இணைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இராணுவ வட்டாரத் தகவலின்படி படையில் இருந்து தப்பி ஓடிய சிப்பாய்களின் எண்ணிக்கை சுமார் 12 ஆயிரமாகும்.

படையில் இருந்து தப்பி ஓடிய சிப்பாய்களைக் கைது செய்வதற்காக கடந்தவாரம் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் வீடு வீடாகச் சென்று தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ள விருப்பதான தகவல் நேரகாலத்துடன் வெளிவந்தபடியால் இந்த நடவடிக்கை கைவிடப்பட்டது. எவ்வாறாயினும் படையில் மீண்டும் இணைவதற்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காலம் மார்ச் 5 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது.

படையினருக்குத்தெம்பூட்டுவதற்காக பல முறை பத்திரிகையாளர்கள் போர் முனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இருப்பினும் இதன் மூலமாகவும் சாதகமான பயனேதும் கிட்டவில்லை. பத்திரிகைகள் மூலம் அறிவித்தல்களை வெளியிடுவதால் பயன் கிட்டும் என நாம் தெரிவித்திருந்தோம். சிங்கப்பூர் இராணுவத்தின் பிரசார நடவடிக்கைகளை முன்மாதிரியாகக் கொள்ளலாம்.

இதேவேளை ஆனையிறவு போர் முனையில் குறிப்பிடும்படியான சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை. விடுதலைப்புலிகள் தாக்குதல்களை மேற்கொள்ளாது நிசப்தமாக இருப்பதானது அவர்களது குள்ள நடவடிக்கைகளில் ஒன்று என இராணுவ விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான இறுதி நடவடிக்கைகள் தயாரிக்கப்படும் வரை அதாவது அடுத்துவரும்

## பேரழிவே ஏற்படும் என்கிறது தெற்கின் சிங்கள இதழ்

மூன்று நான்கு மாதங்களில் விடுதலைப்புலிகள் தாக்குதல்களை மேற்கொள்ள மாட்டார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் இந்தக் கால எல்லைக்குள் விடுதலைப்புலிகள் தமது அமைப்புக்கு முடிந்தளவு உறுப்பினர்களையும் பெருமளவு யுத்த உபகரணங்களையும் சேர்ப்பர் என இராணுவம் நம்புகிறது.

1995 இல் விடுதலைப்புலிகள் மூன்று மாதங்களாக நிசப்தமாக இருந்துவிட்டு திடீரென பேச்சுவார்த்தைகளை முறித்துக்கொண்டு தாக்குதலை மேற்கொண்டது ஞாபகத்தில் இருக்கும் என நினைக்கின்றோம். அந்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து ஏப்ரல் மாதம் வரையான இடைவெளிக்குள் 60 தொன் நிறையுள்ள வெடிப் பொருள்களை நாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

1994 இல் யூரோ — உக்கிரைன் கொன்சல்ரன்ஷி நிறுவனத்தினால் உக்கிரைனிலிருந்து அந்த வெடிப்பொருள்கள் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தரான சோமலிங்கம் சாந்தகுமார் என்பவரால் உக்கிரைன் நிறுவனத்திற்கு இதற்கான பணம் வழங்கப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட வெடிப்பொருள்களைப் பயன்படுத்திக் கொழும்பிலுள்ள உலக வர்த்தக நிலையம், கண்டியிலுள்ள தலதா மாளிகை, தெஹிவளையில் பிரயாணிகள் ரயில் மீதான தாக்குதல்கள் உட்பட பல்வேறு தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் மாநகர முதல்வரின் படுகொலையைப் போல் பல் வேறு தற்கொலைத் தாக்குதல் சம்பவங்களுக்கு இந்த வெடிப்பொருள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என நம்பப்படுகிறது. மிதிவெடிகள் தயாரிக்கவும் இந்த வெடிப் பொருள்களின் ஒரு பகுதி பயன்படுத்தப்பட்டன எனத்தெரிய வருகிறது.

### தடைகளை நீக்கும் கோரிக்கை

விடுதலைப் புலிகளின் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பான அனுபவங்களைக் கவனத்திற் கொண்டு அரசு மிக மிக அவதானத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவேண்டும். அரசு போதிய கவனம் செலுத்தத் தவறினால் விடுதலைப்புலிகள் அரச படைகள் மீது பாரிய தாக்குதல்களை மேற்கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளப் பொருத்தமான சூழ்நிலையை உருவாக்கும் நோக்கில் தமிழ் மக்கள் இதுவரை அனுபவித்து வந்த தடைகள் நீக்கப்பட வேண்டும்என நோர்வேவெளிவிவகார அமைச்சர் ஊடாக விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதிலிருந்து தெளிவாவது என்னவெனில் வடக்கு — கிழக்குப் பிரதேசங்களில் இருந்து அரச படைகள் வாபஸ்பெறவேண்டும் என்பதாகும். இவ்வாறு இராணுவம் வாபஸ்பெறாவிட்டால் பேரழிவே நிகழும். சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது அரச தரப்பில் உயர் மட்டத்திலுள்ளவர்கள் பங்குபற்றுவதில்லை என இதுவரை அரசு மீது விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டி வந்தனர். ஆனால் விடுதலைப் புலிகள் தரப்பில் கலந்துகொண்டவர்களும் கனிஷ்ட — முடிவெடுக்க முடியாத — உறுப்பினர்களேயாவர்.

எவ்வாறாயினும் பிரபாகரன் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற உடன்பட்டால் மாத்திரமே அரசு சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்ள உடன்பட வேண்டும். ★

தமிழில்: கஜனி

---

யாழ். மத்திய கல்லூரி

## கட்டடத் திருத்த வேலைக்கு மேலும் 30 லட்சம் ரூபா

யாழ்ப்பாணம், மார்ச் 13

கடந்தகாலயுத்தத்தால்சேதமடைந்த பழைய கட்டடங்களைஅகற்றிபுதிதாக அமைக்கப்படும்யாழ்.மத்தியகல்லூரியின் மூன்று மாடிக்கட்டடத்தின் இரண்டாம் தொகுதியினைக் கட்டிமுடிக்க இவ்வருடம் 30 லட்சம்ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார, சபை இந்நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதேவேளை—

யுத்த நடவடிக்கைகளினால் மிகமோசமாகச் சேதமடைந்து இது காலவரையும் திருத்தப்படாமல் இருக்கும் இக்கல்லூரியின் விடுதி, நூலகம், வகுப்பறைக் கட்டடம் ஆகியவற்றைத் திருத்தி புனரமைக்க ஒரு கோடி ரூபா தேவையென கல்லூரி அதிபர் க. இராசதுரை வட மாகாண புனரமைப்பு புனர்வாழ்வு அதிகாரசபைத்தலைவர் என். ஒபடகே, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

இக் கட்டடங்களை இவ்வருடம் திருத்தாதுபோனால் முற்றாகவே இக் கட்டடங்களை அழித்து புதிய கட்டடங்களைக் கட்டும் நிலை ஏற்படும் எனவும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-173-15)

## தீர்த்தக்கேணி புனரமைப்பு

இருபாலை கற்பகப் பிள்ளையார் கோயில் தீர்த்தக் கேணி புனரமைப்புப் பணி ஆரம்பமாகியுள்ளது.

மிகப் பழமை வாய்ந்த இத் தீர்த்தக் கேணியை கோயில் பரிபாலன சபை புனரமைத்து வருகிறது. சில மாதங்களுக்குள் இப்புனரமைப்புப் பணி பூர்த்தி செய்யப்படும்.

## நூலகத்துக்கு நூல்கள்

பண்டத்தரிப்பு சென். மேரிஸ் சனசமூக நிலையத்திற்கு போரூட் நிறுவனம் 12 ஆயிரம் ரூபாபணத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சனசமூகநிலைய நிர்வாகம் இந்தத் தொகையினைக் கொண்டு நிலையத்தின் நூலகத்திற்கு வேண்டிய நூல் வகைகளில் ஒரு தொகுதியை வாங்கியுள்ளது. (ஐ-15)

## சாராய உற்பத்தி ஆரம்பம்

சாவகச்சேரி, மார்ச் 13

கைதடி சாராய வடிசாலை 2000 ஆம் ஆண்டுக்கான உற்பத்தியை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கடந்த 9 ஆம் திகதி தொடக்கம் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆரம்ப நிகழ்வை வடிசாலைக் கொத்தணித் தலைவர் க.தவராசா தொடக்கி வைத்தார்.

இந்த உற்பத்தியில் நாளாந்தம் 10 ஆயிரம் போத்தல்கள் வடிக்கப்பட்டு மதுசாரம் பெறக்கூடிய வகையில் தொழில்நுட்ப வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த வருடம் கள்ளுக்கான பருவகாலம் முடிந்ததும் இந்த வடிசாலையில் மதுசார உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் தற்போது கள் உற்பத்தி அதிகரிக்கத் தொடங்கியதும் மதுசார உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடிசாலை முகாமையாளர் தெரிவித்தார். (இ-31)

## மாதர் சங்கம் ஊடாக் கடன்

காரைநகரில் பெண்களின் சுய தொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் காரைமத்தி மாதர் சங்கத்தின் ஊடாக ஒரு லட்சம் ரூபா நிதியினைக் கடனாக வழங்க முன்வந்துள்ளது.

தையல், கோழிவளர்ப்பு மற்றும் ஆடு, மாடு வளர்ப்பு போன்றவற்றில் ஈடுபடும் 20 பெண்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் இன்று திங்கட்கிழமை முதல் இக்கடன் வழங்கப்பட உள்ளதாக காரை மத்தி கிராம அலுவலர் தெரிவித்தார். (ஐ-73)

உதயன்

## திருப்பத்துக்கான ஆரம்பம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காணப்படவேண்டுமானால் ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் இணக்கப்பாடு இன்றியமையாததாகும். இது விடயத்தில் முதலாவது தேவையும் இந்த இணக்கப்பாடே.

ஆட்சியில் இருந்தவர்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண முனைந்த போதெல்லாம், அவ்வேளை பிரதான எதிர்க்கட்சியாக இருந்த தரப்பு அதனைக் குழப்பித் தடுத்து விடுவது இலங்கை அரசியலின் ஒரு சாபக்கேடு. அது தொடர்கிறது.

ஆளுங்கட்சி — எதிர்க்கட்சி இணக்கப்பாடின்மை என்ற முதலாவது தடைக் கோலைத் தாண்டக்கூடியசிறியகீற்றொளி கடந்த வாரம் மின்னிக் காட்டியிருக்கிறது. ஆளும் கட்சியின் தலைவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கடந்த வியாழக்கிழமை சந்தித்துப் பேசியதையே இங்கு குறிப்பிடுகிறோம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு தங்களுக்கு இடையில் — தமது கட்சிகளுக்கு இடையில்—பொது இணக்கப்பாடு ஒன்று அவசியம் என்பதனை இருவரும் நேருக்கு நேர் ஒப்புக்கொண்டுள்ளனர். அதனை நோக்கிச் செயற்படவும் அவர்கள் உடன்பட்டுள்ளனர்.

இலங்கை அரசியல் அரங்கின் இரண்டு பிரதான நடிகர்களின் இப்போதைய காட்சி, இந்த நாட்டின் கடந்த ஐம்பது வருட கால அரசியல் வரலாற்றுக்குப் பிந்திய ஒரு புதிய திருப்பத்துக்கான ஆரம்பம் எனக் கருதலாம். இந்த நல்ல ஆரம்பம் இடையில் சறுக்குண்டு போகாமல், பயனுள்ள விளைவைத் தர வேண்டும்.

தமிழர்களின் நியாயமான, நீதியான அரசியல் அபிலாசைகள் புறக்கணிக்கப்படாத வகையில் அமைந்த தீர்வு ஒன்று வகுக்கப்பட வேண்டும். அதனை ஆளும்தரப்பும் எதிர்த்தரப்பும் உணர்ந்து கொண்டு செயலாற்றி இணக்கப்பாட்டுக்கு வருவது அவசியம்.

தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு மாற்றீடான தீர்வு யோசனை எவ்வாறு அமைய வேண்டும் என்று ஆளும் — எதிர்த் தரப்புகள் தமக்கிடையே முடிவு செய்து கொண்டாலே, இணக்கம் கண்டாலே, தமிழர்கள் அதனை ஏற்றுக் கொள்கிறார்களா என்பதனை அறியமுடியும்.

அந்த வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான சரியான படிமுறை இப்போதுதான் உரியவாறு இனங்காணப்பட்டுள்ளது எனலாம். இந்தப் படிமுறையைத் தக்கவாறு பயிற்சி செய்து — செயற்படுத்தி — இரு தரப்புகளும் இணக்கத்துக்கு வரவேண்டும். அப்போதுதான் தீர்வு காண்பதென்ற மலையேறும் பணியில் முதலாவது படியில் கால் அடி எடுத்து வைப்பதற்கு ஒப்பான நிலை தோன்றும்,

இரண்டு தரப்புகளும் தேசிய நலனைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அரசியல் சுயலாபத்தை முன்னிறுத்திச் செயற்பட்ட போக்கைக் கைவிட முன்வந்திருப்பது, மனக்கசப்புக்களை நீக்கி, கருத்து வேற்றுமைகளைக் களைந்து பொது நோக்குடன் செயற்பட இணங்கியிருப்பது வரவேற்கத்தக்கது. புதிய திருப்பத்துக்கான இந்த ஆரம்பம் நல்லபடியாகத் தொடர்ந்து நல்விளைவு தருவதாக!

# கிராமிய சுகாதார மேம்பாட்டில் அக்கறை செலுத்தும் ஐ. நா. திட்டம்

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் யாழ். புனர்வாழ்வு, மீள் குடியேற்ற புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் பங்கேற்பு அணுகுமுறையிலான கிராமிய சுகாதார மேம்பாடு தொடர்பாக விளக்கும் கட்டுரை இது.

**யாழ்.** குடாநாட்டின் கிராமிய சுகாதார வைத்திய நிலையங்கள், மக்கள் தம்மிடம் இருந்து எதிர்பார்க்கும் சுகாதார, வைத்திய சேவைகளை வழங்க முடியாத நிலையில் உள்ளன. எனவே இவற்றினைப் புனரமைப்புச் செய்ய வேண்டியது அவசியமான தொன்றாய் அமைந்தது. இதனடிப்படையில் ஐக்கிய நாடுகள் திட்ட சேவைகள் அலுவலகம் யாழ். புனர்வாழ்வு மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டம் (UNOPS/JRRP) கிராமிய மருத்துவ சுகாதார நிலையங்களை புனரமைப்புச் செய்வதன் ஊடாக கிராமிய சுகாதாரத்தினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

இந்நடவடிக்கைகளில், மரபு ரீதியாக கையாளப்பட்டு வந்த மேலிருந்து கீழான (Top to Bottom) திட்டமிடல் முறையைக் கைவிட்டு, மக்களுடன் இணைந்து அவர்களது பங்கேற்புடன் அவர்களது மருத்துவ சுகாதார தேவைகளைக் கண்டறிந்து அதனடிப்படையில் திட்ட இடையீடுகளை மேற்கொள்ளும் பங்கேற்பு அணுகு முறையினைப் பயன்படுத்துவதென தீர்மானித்தது.

இதனை நடைமுறைப்படுத்தும் பொருட்டு ஆரம்ப நடவடிக்கையாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறிய 20 பட்டதாரிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு பங்கேற்பு அணுகுமுறை தொடர்பான பயிற்சியினை வழங்கி கிராமிய சுகாதாரமேம்பாட்டுக்கான திட்டமிடல் செய்முறையில் அவர்களை ஈடுபடுத்தியது.

**பங்கேற்பு அணுகுமுறையின் பயன்பாட்டினால் ஏற்பட்ட விளைவுகள்:-**

★ கிராமிய சுகாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் நடத்தப்பட்ட பங்கேற்புத் திட்டமிடல் பட்டறையானது வைத்தியர்களும் மருத்துவ ஊழியர்களும் மக்கள் எதிர்பார்க்கும் சுகாதார, மருத்துவ சம்பந்தமான தேவைகளை அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்தது.

★ மருத்துவ நிலையங்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள், மட்டுப்பாடுகள் என்பனவற்றை மக்கள் விளங்கிக் கொள்ளக் கூடிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்ததுடன் கிராமிய சுகாதாரத்தினை மேம்படுத்தும் செய்முறையில் தமது பங்கு என்ன என்பதனை மக்கள் தெரிந்து கொள்ளவும் வழி சமைத்தது.

தெல்லிப்பழை சு.வை.அ. பிரிவில் நடத்தப்பட்ட திட்டமிடல் பட்டறையில், நோயாளிகளுக்கான மருந்துக் குளிகைகள் சரியான விவரங்கள் எழுதப்பட்ட உறைகளில் இட்டு வழங்கப்படுவதில்லை என்று எடுத்துக்கூறப்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தினர் தம்மாலான முயற்சியினை எடுத்து தற்போது இலவசமாக இந்த உறைகளினை தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு வழங்கி வருகின்றனர்.

உடுவில் பிரதேச மக்கள், உடுவில் மத்திய மருந்தக கட்டடம் அமைப்பதற்குத் தேவையான காணியினைத் தமது முயற்சியின் மூலம் பெற்றுக் கொண்டுள்ளனர்.

பண்டத்தரிப்பு பிரதேச மக்கள் தமது பங்களிப்பாக 48 ஆயிரம் ரூபாவை சேர்த்து அவற்றுடன் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் உதவியுடன் போரினால் சிதைக்கப்பட்ட கிராமிய வைத்திய சாலையின் வெளிநோயாளர் பகுதிக்கான கட்டடத்தை அமைத்து வருகின்றனர்.

★ மக்களுக்கும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் இடையே சரியான முறையில் தொடர்பாடல் மேற்கொள்ளப்படாமையினால் மக்களின் நன்மை கருதி நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்கள் முழுமையான பலனை அளிக்கவில்லை என்பதனை இரு தரப்பினரும் உணர்ந்துகொள்ளக்கூடிய வாய்ப்பினை திட்டமிடல் பட்டறை ஏற்படுத்திக் கொடுத்தது.

★ மக்களில், கிராமிய சுகாதார விடயங்களோடு சம்பந்தப்பட்ட பல்வேறுபட்ட பங்குதாரர்களை ஒரே மேடையில் கொண்டுவர உதவி செய்ததுடன், அவர்களோடு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளையும், பிரச்சினைகளையும் அறிந்து, ஒருவரை ஒருவர் விளங்கிக் கொள்வதற்கும் பங்கேற்பு அணுகுமுறையிலான திட்டமிடல் பட்டறையானது களம் அமைத்துக் கொடுத்தது.

★ வெவ்வேறு மட்ட வைத்தியசாலை ஊழியர்களுக்கு இடையே, அவர்கள் கடமை ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஏனைய ஊழியர்களுடன் பகிர்ந்து கொண்டு, அதன் மூலம் அவற்றுக்கான தீர்வுகளைக் காணுவதற்கான ஆரம்ப அடியை இத்திட்டமிடல் பட்டறை எடுத்துக் கொடுத்தது. அதன் அடிப்படையில் தொடர்ந்தும் இது போன்ற சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதென இப்பட்டறையில் தீர்மானம் எடுக்கப்பட்டு, சில வைத்தியசாலைகளில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

★ கிராமிய சுகாதார மேம்பாட்டுடன் தொடர்புடைய, பங்குபற்றுவர்கள் அனைவரும் சேர்ந்து சுகாதார சம்பந்தமான பிரச்சினைகள் பற்றியும், அவற்றிக்கான தீர்வுகள் பற்றியும் தர்க்க ரீதியாக ஆராய்ந்ததுடன் இவை தொடர்பாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய முடிவினை எடுக்கக் கூடியதாகவும் இருந்தமை பங்கேற்பு அணுகுமுறை ஊடான தீர்மானம் எடுத்தலின் சாத்தியப்பாட்டினை அவர்களுக்கு உணர்த்தி நின்றது. அத்துடன் இப்பட்டறையில் பயன்படுத்தப்பட்ட தர்க்க ரீதியான சட்ட அமைப்பு முறை (LFA), பங்கேற்புக்கருவிகள் (PRA Tools) போன்றன பயனுள்ள பல புதிய விடயங்களாக இருந்ததுடன், இம் முறைகளை எதிர்வரும் காலத்தில் தமது சொந்தக் கடமைகளிலும் பயனுள்ள வகையில் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும் என பங்குபற்றுனர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

★ சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளுக்கான பங்கேற்புத் திட்டமிடல் பட்டறையைத் தொடர்ந்து இறுதியாக நடத்தப்பட்ட யாழ். மாவட்ட மட்டத்திலான திட்டமிடல் பட்டறையில் பல்வேறு துறைசார்ந்த தலைமை அதிகாரிகள் இணைந்து, ஏற்கனவே எடுக்கப்பட்ட பங்கேற்பு அடிப்படையிலான தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்ந்ததன் மூலம் சாத்தியப்படத்தக்க தீர்வுகளை எடுக்கக் கூடியதாக இருந்தது மட்டுமன்றி சில தீர்மானங்களை நடைமுறைப் படுத்த முடியாதபடி அவற்றில் தாக்கம் செலுத்தும் கொள்கை சார்ந்த பல விடயங்களை மக்களும், இந்த உத்தியோகத்தர்களும் அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பினையும் இப்பட்டறை ஏற்படுத்திக் கொடுத்தது.

கிராமிய சுகாதார மேம்பாட்டுத் திட்டமிடல் பட்டறையினைத் தொடர்ந்து தெல்லிப்பழை, மானிப்பாய் சு. வை. அ. பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆழ்நிலை ஆய்வுகளின் போது அந்தந்தப் பிரிவிலுள்ள ஒவ்வொரு மருத்துவமனைக்கும் உரிய தனித்துவமான பிரச்சினைகளையும் பயனாளிகளின் வேறுபட்ட பங்களிப்புகளையும் ஈடுபாட்டையும் எம்மால் அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. அத்துடன் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கும் பயனாளிகளுக்கும் இடையேயும் இது தொடர்பான விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. இதனடிப்படையில் மருத்துவமனை மட்டத்தில் மக்கள் பங்கேற்பின் ஊடாகத் தீர்க்கப்படக்கூடியபலவிடயங்கள் அவர்களால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

கிராமிய சுகாதார மேம்பாட்டுக்கான ஆழ்நிலை ஆய்வின் மூலம் பொதுமக்களும் ஏனைய அரச உத்தியோகத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

பங்குனி 1

செவ்வாய்க்கிழமை

திதி: நவமி

முன்இரவு 9.17 வரை.

நட்சத்திரம்: திருவாதிரை

முன்இரவு 11.31 வரை.

காரடையா நோன்பு

சுபநேரம்: 10.51—12.21

ராகுகாலம்: 3.21—4.51

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## தவக்காலச் சிந்தனை

(ஆறாம் நாள்)

எமது அன்றாட வாழ்வின் சவால்கள் மத்தியிலே இறைவன் எங்கே? அன்பு மலருமா? அமைதிகிட்டுமா? என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இவற்றை நாம் எட்ட முயல்வதும் இல்லை; அவை எம்மைத் தேடி வரும் சந்தர்ப்பங்களை இனங்கண்டு கொள்வதும் இல்லை.

இன்று எமது சூழலில் எத்தனையோ பேர் உணவின்றி உடையின்றி, ஆறுதலற்று, அந்நியமுற்று, சிறையிலும், நோயிலும் உடைந்த உள்ளங்களுடன் உலாவிக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் இறைவன் எம்மைத் தேடிவரும் அன்பின் வடிவங்களே. ஏழைகளின் சிரிப்பில் தான் இறைவனைக் காணமுடியும் அன்பைக் கொடுத்தால்தான் அன்பைப் பெறமுடியும். பகைவனைமன்னித்தாலே அமைதி எம்மை அரவணைக்கும்.

இதையே கிறிஸ்து யேசு முன்மாதிரியாக நடைமுறையில்நிரூபித்துச்சென்றார். இவ்வாறாக நலிவுற்றோர், உதவி நாடுவோரைக் கண்டும் கேட்டும் நழுவிச் சென்ற நாள்கள் உன் வாழ்வில் எத்தனை? அவர்களை விரட்டி விட்ட முறைகள் எத்தனை? சிந்தித்துப்பார். "சின்னஞ்சிறிய என் சகோதரருள் ஒருவனுக்கு நீங்கள் இவற்றைச் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" [மத். 25;40] மனிதத்தை மதித்து, புனிதத்தைப் புரிந்து, சமத்துவம் காத்து புதிய சிந்தனை சேர்த்து வாழும் காலமாக இத் தவக் காலத்தை மாற்றிடப் பயணிப்போம். செயற்படுவோம்.

எஸ். யேசுதாஸ்
(கொழும்புத்துறை)

## உதய வாக்கு

உலகம் மாறுகிறதென்பதையே பலர் ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள். அவர்கள், தங்கள் மனக் கதவுகளை அடைத்து தாளிட்டுப் புதிய கருத்துக்களை உள்ளேவிட மாட்டேன் என்கிறார்கள்.

- நேரு

## யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

### தையல்நாயகி உடனுறை நாதா

இராகம் — ஹிந்தோளம் தாளம் — ஆதி (திஸ்ர நடை)

பல்லவி

தையல் நாயகியுடனுறை நாதா
மையல் கொண்டோமே பொற்திருப்பாதா

அனுபல்லவி

உய்யவொரு வழி எந்தமக்கே காட்டு
செய்வதறியாது திகைத்திடுகின்றோமே (தையல்)

சரணம்

வண்ணைப் பதிதனில் வனப்புடன் இனிதே
பெண்ணை யொருபாகம் கொண்ட பிரானே
பண்ணாகி யிசையாகி கண்ணாகக் காப்பவனே
விண்ணா ளரசே வைத்திய ஈஸ்வரனே
(தையல்)

தாவடியூர் எஸ். ஆர். திருஞானசம்பந்தன்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் குளிர்சாதனப் பெட்டிகள் மூன்று [Kelvinator - Double door] இத்துடன் ஐஸ்கட்டிகளும் விற்பனைக்கு உண்டு. 1 தட்டின் விலை 75/- தொடர்புகளுக்கு: தனா கிறீம் ஹவுஸ் 121/2, மானிப்பாய் வீதி, கோணாந்தோட்டம், யாழ்ப்பாணம். (74418)

நல்லூர் அம்மன் வீதியையும், அரசடி வீதியையும் இணைக்கும் கந்தபுராண வீதியில் நான்கு பக்கமும் மதில் சுவருடன் உள்ள 2½ பரப்புக்காணியில் தரமான வீடு ஒன்று நீதியான விலையில் விற்பனைக்குண்டு. சண்முகராஜா, 387, கோயில் வீதி, நல்லூர். காலை 9.30க்குப் முன்னரும் மாலை 3.00 க்கு பின்னரும் நேரடியாகச் சந்திக்கலாம். (74402)

ஓட்டோ — 205 – 9210 விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இ. பாக்கியநாதன் மட்டுவில் தெற்கு, அமெரிக்கன் மிஷன் பாடசாலை றோட், சாவகச்சேரி. (74396)

### கண்டெடுக்கப்பட்டது

சித்தன்கேணி— சங்கானை வீதியில் திரு. பூ. சற்குணம் என்பவரால் பணப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு சித்தன்கேணி கிராம உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ள முடியும். (சி/11382)

யமகா — 90 மோட்டார் சைக்கிள் திறப்புக் கோர்வை ஸ்ரீதர் தியேட்டருக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சஜமுகன காட்வெயர் ஸ்ரரன்லி றோட், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (74417)

### தவறி விட்டது

தாளையடி வடக்கினைப் பிறப்பிடமாகக் கொண்ட குணபால பிறேமலதா என்பவரது தேசிய அ. அ. (இல. 745911765V) சிங்களமொழியால் பிரதி செய்யப்பட்டது. 04– 03– 2000 அன்று தாளையடிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்கூறிய முகவரியில் அல்லது திருமறைக் கலாமன்றம் இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். T.P No- 021 - 2393 என்பவற்றில் ஒப்படைத்து உதவவும். (74423)

தும்பளை தெற்கு, சண்முகம் பத்மாஜினி ஆகிய எனது விசேட அ. அ. (இல. 090806020) தும்பளைக்கும் பருத்தித்துறை பஸ் நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் ஒப்படைத்து உதவவும் (74425)

### ஆடுகள் விற்பனை

சுத்தமான ஜமுனாபாரிஆடுகள், மறிக்குட்டிகள், கடாக்கள் விற்பனைக்கு உண்டு. தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோசென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (74370)

### இறைச்சிக்கோழி தேவை

இறைச்சிக்கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச்சந்தையடி, நல்லூர். (74371)

# கசிப்புத் தொல்லை குருநகரில் அதிகரிக்கிறது

குருநகர், மார்ச் 13

குருநகர் பகுதியில் கசிப்பு விற்பனையும் கசிப்பு அருந்துவோர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து இவற்றைத் தடுப்பதற்குப் படையினரும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

படையினர் இரவு நேரங்களில் இப்பகுதியில் கசிப்பு வேட்டைக்காக திடீர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குருநகர் மத்திய கிழக்கு வீதியில் கடந்த 8 ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் படையினர் ரோந்து நடவடிக்கையை மேற்கொண்ட போது அப்பகுதியில் வீடு ஒன்றில் கசிப்பு அருந்திக் கொண்டிருந்த மூவரைக் கைது செய்து கசிப்பு விற்பனை செய்த இடத்தைக் காட்டுமாறு கேட்டனர். அந்நேரம் கசிப்பு விற்பனை செய்தவர்கள் தலைமறைவாகி விட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் படையினரால் இவ்வீதியூடாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

கசிப்பு அருந்தியவர்கள் ''இனிமேல் நாங்கள் கசிப்புக் குடிக்க மாட்டோம்'' எனக் குரல் எழுப்பிச் சென்றனர். பின்னர் அவர்கள் படையினரால் விடுவிக்கப்பட்டனர். (ஐ-51)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி, மார்ச் 13

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'நடைமுறை வாழ்க்கையில் சமயம்' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் சொற்பொழிவாற்றுவார்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை வல்வெட்டித்துறை வைத்தீஸ்வரன் கோவில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ ப. மனோகரக் குருக்கள் வழங்குவார். (ஐ-173)

# விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ் குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 10 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு;-

**சங்கானை**

(121695ஏ), (131655ஏ), (131655பி), (131655சி), (131655டி), (135670ஏ), (135682ஏ), (135695ஏ), (135798ஏ), (135798பி), (135848ஏ), (135874ஏ), (135874பி), (135874சி), (135924ஏ), (135924பி), (138093ஏ), (138093பி), (138105 ஏ), (138105 பி), (138107 ஏ), (138107 பி), (138165 ஏ), (138165 பி), (138165 சி), (138165 டி), (138165 ஈ), (138202 ஏ), (138203 ஏ), (138337 ஏ), (138338 ஏ), (138339 ஏ), (138340 ஏ), (138344 ஏ).

**கோப்பாய்**

(134170 ஏ), (136250 ஏ), (136278 ஏ), (136404 ஏ), (136404 பி), (136408 ஏ), (136416 ஏ), (136416 பி), (136417 ஏ), (136489 ஏ), (136705 ஏ), (136707 ஏ), (136707 பி), (136712 ஏ), (136712 பி), (136612 சி), (136712 டி), (138720 ஏ), (136720 பி), (136723 ஏ),

**நல்லூர்**

(135834ஏ), (135834பி), (138131ஏ), ((138131பி), (138212ஏ), (138212பி),

**சண்டிலிப்பாய்**

(125166ஏ), (125166டி), (125166சி), (129343ஏ), (129499ஏ), (135600ஏ), (135827ஏ), (135833ஏ), (135864ஏ), (135891ஏ), (135908ஏ), (135909ஏ), (135962ஏ), (138089ஏ), (138343ஏ), (138356ஏ),

**தெல்லிப்பழை**

(135823ஏ),

**உடுவில்**

(135914ஏ), (135914பி), (138341ஏ), (138357ஏ), (138484ஏ), (ஐ-10)

# சாவல்கட்டு கிராமச்சிறுவருக்கு பாடசாலை நிறுவக் கோரிக்கை

சண்டிலிப்பாய், மார்ச் 13

சாவல்கட்டு கிராமத்தில் உள்ள சிறுவர்களின் நலன் கருதி புதிய சிறுவர் பாடசாலை ஒன்றை அங்கு நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று கடற்றொழில், நீரியல்துறை அமைச்சிடம் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த வாரம் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் நா. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றபோது மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தற்போது சாவல்கட்டு கிராமத்தில் 185 சிறுவர்கள் உள்ளனர். இங்குள்ள பாலர் பாடசாலை ஒன்றில் 30 பேர் வரைதான் கற்கமுடிகின்றது. ஆகவே இக்கிராமத்தில் ஏனைய சிறுவர்களின் நலனை முன்னிட்டு சிறுவர் பாடசாலை ஒன்றை விரைவில் நிறுவ வேண்டியது அவசியமானது என்று இத்தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை – கடற்றொழிலுக்குத் தேவையான உபகரணங்களை சங்கம் கொழும்பிலிருந்து கொள்வனவு செய்து இங்குள்ள கடற்றொழிலாளர்களுக்கு சகாய விலையில் வழங்குவது என்றும் தீர்மானித்துள்ளது.

சங்கத்தின் புது வருட நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது. சங்கத்தின் தலைவராக நா. பொன்னம்பலம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ஐ-135)

## மனையியல் பயிற்சிகள்

வலி. கிழக்கு, மார்ச் 13

வலி. கிழக்கு வட பகுதி அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் சங்க எல்லைக்குட்பட்ட மகளிருக்கான இலவச மனைப் பொருளியல் வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

பூவேலை, கேக் ஐசிங், தலையலங்காரம், தையல், கோலம் போடல், தலைமைத்துவப் பயிற்சி போன்றபயிற்சிகளே இலவசமாக வழங்கப்பட்டுவருகின்றன.

6 மாதகாலம் நடைபெறும் பயிற்சி வகுப்பில் 40 பெண்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். (ஐ–180)

## கணித பாடக் கருத்தரங்குகள்

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 13

சாவகச்சேரி, மகளிர் கல்லூரி வளவில் இயங்கிவரும் கணித மூலவள நிலையத்தில் தற்போது தரம் 10, தரம் 11 மாணவர்களுக்கான கணித பாட கருத்தரங்குகளும்செயல்முறை வகுப்புக்களும் இடம் பெற்று வருகின்றன.

ஜீ. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கணிதபாட சித்தியை அதிகரிக்கும் நோக்குடனேயே மேற்படி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சால் ஒரு தொகுதி கணித உபகரணங்கள் கடந்த வருட இறுதியில் இந்நிலையத்துக்கு வழங்கப்பட்டிருந்தன.

## ஆரம்ப வைபவம்

அகதிகளுக்கான ஐ. நா தூதரகத்தினால் காரைநகர் ஊரிக் கிராமத்தில் புனரமைக்கப்பட்ட குழாய் நீர் விநியோகத்திட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் கே. எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு அகதிகளுக்கான ஐ நா. தூதரக பொறியியலாளர் எஸ். மொசானி பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

கிராம மக்களுடைய பங்களிப்புடன் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் 4லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் மேற்படி குழாய் நீர் விநியோகத்திட்டம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாக காரைநகர் தெற்கு பதில் கிராம அலுவலர் எஸ் கே. சிவலிங்கம் தெரிவித்தார். (ஐ-73)

# மக்களின் பங்களிப்பின்றி அபிவிருத்தி சாத்தியப்படாது

## சனசமூக நிலையப் பொன்விழாவில் உரை

திருநெல்வேலி, மார்ச் 13

மக்களின் பங்களிப்புஇன்றி எந்தத் திட்டத்தையோ, அபிவிருத்திகளையோ ஒருபோதும் செயற்படுத்த முடியாது.

சாவல்கட்டு மகாத்மா சனசமூ நிலையத்தின் பொன்விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் வலி. தெற்கு பிரதேச செயலரும், சண்டிலிப்பாய் பதில் பிரதேச செயலருமான ஆ. மகாலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நிலையத்தலைவர் ரி. விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;-

இன்றுள்ள காலகட்டத்தில் மக்களின் பங்களிப்பு இன்றி எந்தத் திட்டத்தையும், அபிவிருத்தி வேலைகளையும் நிறைவேற்றமுடியாது. மக்கள் தங்கள் பிரதேசத்தின், கிராமத்தின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு செயற்படும் வேளையில்தான் எம்மாலும் அதற்கு உதவிகள் செய்யமுடியும். எமது முன்னோர்கள் ஆரம்பித்த பொது நல அமைப்புகள் பல கால மாற்றத்தினால் தொடர்ந்து செயற்பட முடியாது போய்விட்டன. வெள்ளைக்காரர்களின் ஆட்சியின்போது அக்காலத்தில் ஏற்பட்ட பிரதேச உணர்வுகளாலும் கிராமிய உணர்வுகளாலும் பல அமைப்புகள் உருவாகின. அவ்வாறானதொரு அமைப்பான இந்த சனசமூக நிலையம் தொடர்ந்தும் இயங்கி இங்கு பல சமூக நல சேவைகளை வழங்கி வருவதை அறிய மகிழ்ச்சியாக இருக்கின்றது.

யுத்தத்தினால் அழிந்த பல நாடுகள் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களினால் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டு புத்துணர்வுடன் செயற் பட்டதை உலக வரலாறுகளில் காண்கின்றோம். யுத்தத்தின் போது அணு குண்டு வீச்சுக்கு இலக்காகியநாடான ஜப்பான் இன்று மீண்டும் கட்டி எழுப்பப்பட்டு உலக வல்லரசான அமெரிக்காவுக்கே சவால் விடும் வகையில் பல துறைகளிலும் வளர்ச்சி கண்டுள்ளது. எந்த நிலைமை ஏற்பட்டாலும் மக்கள் நல்ல கல்வியைப் பெற்று ஒழுக்கம் மற்றும் பண்பாடுகளைப் பேணி வாழ முற்பட வேண்டும்—

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் உப அலுவலக பொறுப்பதிகாரி செ. மனோகரன் உட்பட மற்றும் பலர் இவ் விழாவில் உரையாற்றினார்கள்.

நிலையத்தின் கடந்த கால ஸ்தாபகர்களும் நிர்வாகிகளும் மலர் மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். பொன் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ஐ-135)

### கிராமிய சுகாதார....

(7 ஆம் பக்கத் தொடர்)

தர்களும் கிராமிய சுகாதார மேம்பாடு சம்பந்தமாக இணைந்து செயலாற்றுவதற்கான சர்தர்ப்பம் வழங்கப்பட்டது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுன்னாகம் மத்திய மருந்தகம், இளவாலை மத்திய மருந்தகம், புன்னாலைக்கட்டுவன் மத்திய மருந்தகம் போன்றவற்றிற்குச் சொந்தமான கட்டடம் அமைப்பதற்கான காணிகளைப் பொது மக்களும் அப் பிரதேசங்களைச் சேர்ந்த கிராம அலுவலர்கள், பிரதேச செயலர் போன்றோர்களும் இணைந்து பெற்றுக் கொண்டுள்ளனர்.

இவ்வாறே மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வட்டுக்கோட்டை மத்திய மருந்தகத்துக்கான சொந்தமான கட்டடத்தை அமைப்பதற்கான காணியைப் பொது மக்களும் அப் பிரதேசத்துக்கான பிரதேச செயலரும் இணைந்து பெற்றுக்கொள்ள முயற்சி செய்வதாக உறுதியளித்துள்ளனர்.

மக்கள் பங்கேற்புச் செய்முறையானது சுகாதார மேம்பாடு சம்பந்தமாகச் சமூகத்தின் பல்வேறு வகைப்பட்டவர்களை குறிப்பாக அரச உத்தியோகத்தர்கள், பொது மக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், வைத்திய அதிகாரி போன்றவர்களை ஒன்றிணைத்துத் தங்களுக்குத் தேவையானவற்றைத் தாமே தெரிவு செய்யும் செய்முறையில் அவர்களை ஈடுபடுத்தியுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

- பங்கேற்பு அணுகுமுறைக்குழு

# ஆலயங்களில் பூசை நடைபெறவும் மக்கள் வழிபாடு செய்யவும் உதவுக

## இந்து சமயப் பேரவை ஜனாதிபதிக்கு மகஜர்

வரலாற்றுப் பெருமை மிக்க இந்து ஆலயங்களின் பகுதிகளில் உள்ள படையினரை வெளியேற்றி அந்த ஆலயங்களில் பூசைகள் தடங்கலின்றி நடைபெறவும், மக்கள் சுதந்திரமாகச் சென்று வழிபடவும்உதவுமாறு யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் கோரிக்கை விடுத்துள்ளது.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் வருமாறு:

இந்த நாட்டில் தொடர்ந்து நடைபெறும் போரினால் அழிக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இந்து ஆலயங்களான மன்னார் திருக்கேதீஸ்வரம், திருகோணமலை கோணேஸ்வரம், கீரிமலை நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், தொண்டமனாறு செல்வச் சந்நிதி, உகந்தை முருகன் கோயில், ஆகியவற்றைப் புனரமைக்க நிதியுதவி செய்யுமாறும் இந்து ஆலய பூமிகளில் நிலைகொண்டிருக்கும் இராணுவ முகாம்களை அகற்றி இந்துக்கள் சுதந்திரமாகச் சென்று வழிபட உதவுமாறும் கோரித் தங்களுக்கு எம்மால் அனுப்பப்பட்ட பல்வேறு மகஜர்கள் சம்பந்தமாகவும் தங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றோம்.

இவற்றுள் தாங்கள் வழங்கிய உதவியுடன் திருகோணமலை கோணேஸ்வரம் புனரமைக்கப்பட்டு பூசைகள் நடைபெறுகின்ற போதிலும் ஏனைய 5 இந்துக் கோயில்களும் இன்னமும் புனரமைக்கப்படவில்லை. இராணுவ முகாம்கள் அகற்றப்படவோ இந்துக்கள் சுதந்திரமாகச் சென்று வழிபடவோ அங்கு இன்னும் ஏற்பாடு செய்யப்படவில்லை என்பதை மிகவும் மனவருத்தத்துடன் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.

நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கோயில்களைப் புனரமைக்க தங்களால் வழங்கப்பட்ட நிதியுதவி எவ்வகையிலும் போதாதிருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இந்தக் கோயில்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதால் அவற்றைப் புனரமைப்பதற்குப் பலகோடி ரூபா தேவைப்படுகின்றது.

திருக்கேதீஸ்வரமும் நகுலேஸ்வரமும் இந்துக்களின் முழுமுதற் கடவுளாகிய சிவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட திருத்தலங்கள் ஆகும். இவை உலகெங்கிலுமுள்ள இந்துக்களால் வணங்கப்படுவன.

இந்து ஆலயங்களில் பூசைகள் நடைபெறாதிருப்பது நாட்டுக்குக் கெடுதியை விளைவிக்கும் என இவ்வாலய வரலாறுகளில் கூறப்பட்டிருக்கின்றது. திருக்கேதீஸ்வரத்தைப் புனரமைப்பதற்கு 5 கோடி 70 லட்சம் ரூபா தேவைப்படுகையில் அரசாங்கம் ஒரு கோடி ரூபா மட்டும் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தவிரவும் இங்கு நிலைகொண்டுள்ள இராணுவம் காரணமாகப் புனரமைப்பு வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கும்பாபிஷேகம் பூசைகள் செய்ய முடியாத நிலை இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருக்கேதீஸ்வரம் நாயன்மார்களால் பாடப்பெற்ற பெருமைக்குரிய ஆலயம் ஆகும். சோழ மன்னர்களாலும் பண்டைய சிங்கள மன்னர்களாலும் போற்றித் துதிக்கப்பட்ட சிறப்பு மிக்க திருத்தலம் ஆகும். இலங்கை இந்துக்களின் வழிபாட்டுக்குரிய கோயிலாகும்.

எனவே, இந்த ஆலய வளவிலும், சூழலிலும் நிலைகொண்டுள்ளஇராணுவத்தை உடனடியாக அகற்றி, ஆலய புனரமைப்பு வேலைகளுக்கான மிகுதி நிதியையும் வழங்கி கும்பாபிஷேகமும், பூசைகளும் ஒழுங்காக நடைபெறவும் இந்துக்கள் அங்கு சுதந்திரமாகச் சென்று வழிபாடு செய்யவும் ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த நாட்டில் வாழும் பெரும்பான்மை இந்துத் தமிழர்களின் இந்த நியாயமான கோரிக்கையைத் தாங்களும் தங்கள் அரசாங்கமும் புறக்கணிக்கமாட்டாதென நம்புகின்றோம். அத்துடன் எம்மால் மேலே குறிப்பிடப்பட்ட வரலாற்றுப் பெருமை மிக்க இந்து ஆலயங்களுக்கு மேலதிக நிதிகள் வழங்கிப் புனருத்தாரண வேலைகளை ஊக்குவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். —என்றுள்ளது. (இ)

# நூலக பிரிவுமீண்டும் இயங்குகிறது

பண்டத்தரிப்பு சென்மேரிஸ் சனசமூக நிலையத்தின் நூலகப் பிரிவு மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

பண்டத்தரிப்புப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்த சில மாதங்களில் இயங்கத் தொடங்கிய இந்த சனசமூக நிலையத்தின் நூலகப் பிரிவில் இருந்த நூல்கள் திருட்டுப் போனதை அடுத்தும் சேதமடைந்து காணப்பட்டதை அடுத்தும் இயங்காதிருந்த இந் நூலகம்; மீள புனரமைப்புச் செய்யப்பட்டு சுமார் நான்கு வருடங்களின் பின் தற்போது இயங்க ஆரம்பித்துள்ளது. (இ-15)

# வறுமையால் தற்கொலை!

யாழ்ப்பாணம், மார்ச்13

தாங்கமுடியாத வறுமை காரணமாக மாதகல் பகுதியில் 5 பிள்ளைகளின் தாயார் ஒருவர் தற்கொலை செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாதகல் வடக்கைச் சேர்ந்த திருமதி க. சிவபாலன் (வயது 40) என்பவரே இறந்தவர் ஆவார்.

வறுமை காரணமாக இவர் கடந்த வியாழன் நச்சுத்திரவத்தை அருந்தியதைத் தொடர்ந்து சங்கானை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். (இ-5)

## வாசகர் திருமுகம்

# மாணவர் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும்

யாழ்ப்பாணத்தில் இயங்கவுள்ள புதிய கல்விக் கல்லூரிக்கு மாணவர்களை சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை ஜனவரி மாதம் நடைபெற்றது அனைவரும் அறிந்ததே.

விஞ்ஞானப் பிரிவுக்கு 20 பெண்களும் 10 ஆண்களும் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதிக்கு விண்ணப்பம் கோரும் போது ஜி. சி. ஈ. (உ/த) பரீட்சையில் 200 புள்ளிகள் முதல் அதற்கு மேலான புள்ளிகளைப் பெற்றவர்களை விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டிருந்தது. அதற்கு இணங்க விண்ணப்பித்த, தகுதியுடைய அனைத்து விஞ்ஞானப் பிரிவு மாணவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் நேர்முகப் பரீட்சைக்கு வந்தவர்களில் பலர் பல்கலைக்கழக அனுமதியுடையவர்களாயும் வேறு அரசதுறைகளில் பணிபுரிபவர்களாயும் இருந்தவர். இப்படியானவர்களின் வேண்டாவெறுப்புச் செயலினால் நம்மைப் போன்ற மாணவர்களின் அனுமதி ரத்துச் செய்யப்படும் நிலையிலேயே உள்ளது.

மற்றும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் வெற்றிடங்கள் பல நிரப்பப்படாமல் உள்ளன. குறிப்பாக விஞ்ஞான ஆசிரியர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவிவருவது யாவரும் அறிந்தது தான்.

ஆகையினாலே அனைத்து மாணவர்களினதும் நலன்களையும் கருத்தில் கொண்டு விஞ்ஞானப் பிரிவில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய அனைவரையும் கல்விக் கல்லூரியில் இணைத்துக்கொள்ள உரிய அதிகாரிகள் ஏற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்

இல்லையேல் சேர்த்துக்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை விஞ்ஞானப் பிரிவுக்கு 30 என்ற எண்ணிக்கையில் இருந்து 60 ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன் வருவார்களேயானால் அது மாணவர் சமுதாயத்துக்கு மிகவும் பிரயோசனமுஅளதாக அமையும்.

பாதிக்கப்பட்டோர் சார்பாக

அச்சுவேலி. வ. ராஜநர்த்தனன்

# சலுகை வேண்டும்

பழைய தொலைபேசிப் பாவனையாளர்களுக்கு எந்த விதத்திலாவது கட்டாயம் சலுகை வழங்கப்பட வேண்டும். ஏனெனில் யாழ். குடாநாட்டில் முன்பு மின்சாரம் பாவனையில் இருந்த எல்லோருக்கும் ஏதோ ஒரு வகையில் சலுகை வழங்கப்பட்டுவருகின்றது. ஆனால் யாழ். குடாநாட்டில் தொலைபேசி வசதிகளைக் கொண்டிருந்த வாடிக்கையாளர்களுக்கு எந்தவிதமான சலுகையும் வழங்கப்படவில்லை. விசாரித்தபோது அந்த சேவை இப்போது தனியார் வசம் (ரெலிகொம்) போனபடியால் அந்தச் சலுகை இல்லை, எனக்கூறப்படுகின்றது.

மின்சாரப் பாவனையாளர்கள் முன்பு பணம் செலுத்தித்தான் மின்சாரம் எடுத்தார்கள் என்ற காரணத்துக்காக அவர்களுக்குச் சலுகை வழங்கப்படுவதாயின் அதுபோலவே முன்பு தொலைபேசி வசதிகளைக் கொண்டிருந்தவர்களும் பணம் செலுத்தித்தான் அந்த வசதியைப் பெற்றுக்கொண்டார்கள் என்பதனை ஆதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மறந்து விட்டார்கள் போல் இருக்கின்றது. இனியாவது இதனை மீள் பரிசிலனை செய்து பழைய தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கு ஏதோ ஒரு அடிப்படையில் தொலைபேசி உரிமையாளர் பெயருக்கோ அல்லது நிறுவனத்தின் பெயருக்கோ சலுகை வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

குடாநாட்டில் இருக்கும் மக்களில் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். ஆகவே குடா நாட்டில் எந்தவித புனர்வாழ்வு நடவடிக்கையை ஆரம்பித்தாலும் அதில் பழைய பாவனையாளர்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள்.

சி. ஸ்ரீஜீவா

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

# டாக்டர்கள் பற்றாக்குறை பிரச்சினை யாழ். ஆஸ்பத்திரியில் நீடிக்கிறது

## சிகிச்சை பெற முடியாது தினமும் திரும்பும் நோயாளர்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 13

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது நிலவும் டாக்டர்கள் பற்றாக்குறை, வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வரும் நோயாளர்களுக்கும் வைத்தியசாலை நிர்வாகத்துக்கும் பெரும் சிரமங்களையும் பிரச்சினைகளையும் உருவாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைக்கென தூர இடங்களில் இருந்து வரும் நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாத நிலையில் பல நாள்கள் திரும்பிச் செல்லும் நிலைமை இருந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

கடந்த காலங்களில் (நோயாளர் குறைந்த–காலங்களில்) யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சுமார் 16 டாக்டர்கள் பணிபுரிந்துவந்தனர்.

இதனால் சகல நோயாளர்களும் தகுந்த முறையில் கவனிக்கப்பட்டு உரிய சிகிச்சைகளைப் பெற்றுச் செல்லக் கூடியதாக இருந்தது.

ஆனால் தற்போது டாக்டர்களின் எண்ணிக்கை குறைந்தும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தும் நோயாளர் உரிய காலத்தில் உரிய சிகிச்சையினைப் பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போது டாக்டர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களை விட மூன்றில் ஒரு பங்காகக் குறைந்தும் நோயாளர் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்தும் காணப்படுகின்றது.

பழைய—புதிய நோயாளர்கள் என தினமும் 1800 க்கும் மேற்பட்ட நோயாளர்கள் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைக்கென வருகை தருகின்றனர். நோயாளர் அதிகரித்துள்ள இக்கால வேளையில் ஆஸ்பத்திரியில் நிலவும் டாக்டர்கள் பற்றாக்குறையினால் மூன்றில் ஒரு பங்கு நோயாளர் திரும்பிச் செல்ல வேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது.

வெளி நோயாளர் பிரிவில் கடமை புரியும் டாக்டர்கள் தமது தேநீர் வேளை, உணவு வேளைகளையும் கவனியாது தொடர்ந்து பணியாற்றியும் நோயாளரை முழுமையாகக் கவனிக்க முடியாத—சிகிச்சை அளிக்க முடியாத— நிலையே எஞ்சியுள்ளது.

கடந்தவாரம் வெளிநோயாளர் பிரிவின் சிரேஷ்ட வைத்திய உத்தியோகத்தர் ஒருவர் தமது முக்கிய கடமையில் ஒன்றான அரசாங்க உத்தியோகத்தர்கள் நிரந்தர நியமனம் பெற்றதும் செய்யப்படும் உடல் நலத்தை உறுதிப்படுத்தும் வைத்திய பரிசோதனையையும் நிறுத்திவைத்து சிகிச்சைக்கு வந்த நோயாளர்களைப் பார்வையிட வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. இதனால் அன்றைய தினம் இதற்காகவந்த சுமார் 30க்கும் மேற்பட்ட நிரந்தர நியமனம் பெற்ற அரச கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

தற்போது நிலவும் டாக்டர்கள் பற்றாக்குறை நீங்கும் வரை, தூர இடங்களில் இருந்து வரும் சாதாரண நோயாளர்கள் தமது அயலிலுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சையை பெற்றுக்கொள்ளுமாறு வெளி நோயாளர் பிரிவு வைத்திய வட்டாரத்தில் இருந்து நோயாளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. (இ)

# ஆயுள்வேத மருந்து கொள்வனவு

தென்மராட்சி, மார்ச் 13

பளைப் பிரதேச சபையினால் நடத்தப்படும் ஆயுள்வேத மருந்தகங்களுக்கென 70 ஆயிரம் ரூபாவுக்கு ஆயுள்வேத மருந்துகள் ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் பிரதேச சபையினால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# வலுவிழந்தோருக்கு உபகரணங்கள் கிடைக்கும்

தென்மராட்சி, மார்ச் 13

வடக்கு—கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினர் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள வலுவிழந்தோருக்கு இவ் வருடம் உபகரணங்கள் வழங்குவதற்கு விவரங்களைக் கோரியுள்ளனர்.

முச்சக்கர வண்டி, சக்கர நாற்காலி, காது கேட்கும் கருவி, மூக்குக் கண்ணாடி, ஊன்றுகோல், வெள்ளைப் பிரம்பு, செயற்கைக் கால், கை ஆகியவற்றை வழங்குவதற்காக தகுதியானவர்களின் விவரங்களை அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## பொருள்கள் சங்கத்தில் கொள்முதல்

வலி. கிழக்கு, மார்ச் 13

வலி. கிழக்கு வடபகுதி அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் விவசாயிகளிடம் இருந்து தரமான செத்தல் மிளகாய், பயறு, உழுந்து என்பவற்றைக் கொள்முதல் செய்யவுள்ளது.

பயனாளிகள் நியாயமான விலைக்குத்தரமான பொருள்களை வழங்க முடியும் என சங்கப்பொது முகாமையாளர் தெரிவித்தார். (ஐ-180)

### பாவனையாளரை பாதிக்காதவகையில்

# தொலைத்தொடர்பு நிறுவனங்கள் சீரான கட்டணங்களை நிர்ணயிக்கும்

யாழ் குடாநாட்டில் தனியார் தொலைபேசி நிலையங்களில்(கொமியூனிக்கேசன்களில்) ஒரு சீரான முறையில் பாவனையாளர்களிடம் இருந்து கட்டணங்களை அறவிடுவதற்கு வடபிராந்தியத் தொலைத்தொடர்புச் சேவையாளர் சங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் சி. வி. கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

குடாநாட்டில் உள்ள தொலைத்தொடர்பு நிலையங்களில் கட்டண விகிதங்கள் இடத்துக்கிடம் வேறுபட்ட அளவில் அறவிடப்படுகின்றன என்றும்—

இந்தக் கட்டணங்களை ஒரே சீரான முறையில்— பாவனையாளர்கள் மற்றும் தொலைத் தொடர்பு நிலையங்கள் போன்றவற்றைப் பாதிக்காத வகையில்—அறவிடுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன. அதனையடுத்தே சீரான கட்டணங்களைத் தீர்மானிக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

சங்கத்தின் யாப்பு விதிகளைத் தயாரிக்க டாக்டர் அருளானந்தம் கப்டன் டி. ஏ. எம். குணசிங்கம் ஆகியோர் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-17)

## மறைக்கோட்ட முதல்வர் நியமனம்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வராகப் பணியாற்றிய வண. பி. இருதயதாஸ் அடிகள் பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வராக யாழ். ஆயரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வராக நீண்டகாலமாகப் பணியாற்றிய வண. பீ. எம். இம்மானுவல் அடிகள் பாண்டியந்தாழ்வு அன்னாள் ஆலய பங்குத் தந்தையாகவும்பாண்டியந்தாழ்வு அன்னாள் ஆலய பங்குத் தந்தையாகப் பணியாற்றிய வண. எம். ஈ. ரவிச்சந்திரன் அடிகள் அச்சுவேலிப் பங்கின் புதிய பங்குத் தந்தையாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலிப் பங்கின் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய வண. எக்ஸ். டபிள்யூ ஜேம்ஸ் அடிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மறைக்கோட்டத் திற்கு இடமாற்றப்பட்டுள்ளார். (ஐ-17)

## வன்னி மாணவருக்கு 1,500 அப்பியாசக் கொப்பிகள்

### ஜயலத் எம். பி. அனுப்பினார்

கொழும்பு, மார்ச் 13

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆனந்தபுரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கவென ஆயிரத்து 500 அப்பியாசக் கொப்பிகளை ஐ. தே. க. நியமன எம். பியான டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா அங்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்த அப்பியாசக் கொப்பிகளை அவர் வவுனியா அரச அதிபர் கே. கணேஷிடம் கையளித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கஷ்டமுறும் மாணவர்களுக்கு இவற்றை வழங்க ஏற்பாடு செய்யுமாறு அவர் அரச அதிபரிடம் கோரியுள்ளார்.

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் உள்ள மக்கள் தமக்கு ஏதாவது உதவி தேவைப்படின் '26பி, சமிற் வீடமைப்புத் திட்டம், ஜாவத்த வீதி, கொழும்பு 5' என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ஐ-3)

### வலி. கிழக்கு கூ. சங்கம்

## விவசாயிகளுக்கு கடன் உதவி

வலி. கிழக்கு, மார்ச் 13

வலி. கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட விவசாயிகள், வியாபாரம் செய்ய முயற்சிப்போர் ஆகியோருக்கு சுழற்சி முறையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட நிறுவனத்தின் உதவியுடன் கடன் வழங்கப்பட்டு வருவதாக சங்கப் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

விவசாயிகள், சிறுகைத்தொழில் போன்றவற்றை ஆரம்பிக்க உள்ள பயனாளிகள், கால்நடை வளர்ப்போர் போன்றோருக்கே இச்சுழற்சி முறைக்கடன் வழங்கப்பட்டு வருகின்றது.

கடன் பெறவிரும்புவோர் உடன் சங்கத் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பொது முகாமையாளர் தெரிவித்தார். (ஐ-180)

### மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு

## நிரந்தரக் கட்டடத்துக்கான இடம் விரைவில் தெரிவாகும்

சண்டிலிப்பாய், மார்ச் 13

தற்போது மானிப்பாய் அதிகார் செல்லமுத்து வீதியிலுள்ள தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தரக் கட்டடம் நிறுவுவதற்கான இடம் விரைவில் தெரிவு செய்யப்படவுள்ளது.

இப்பகுதி பொதுநல அமைப்புகளால் நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்காக சிபார்சு செய்யப்பட்டிருக்கும் இடங்களை யாழ். சுகாதார சேவை மாகாணப்பிரதிப் பணிப்பாளர் டாக்டர் செல்வி உமா சிவபாதசுந்தரம், சண்டிலிப்பாய் பதில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் ஆகியோர் கடந்த வாரம் நேரில் சென்று பார்வையிட்டனர். இவற்றில் எந்த இடம் வைத்தியசாலை நிறுவுவதற்கு உகந்த-பொருத்தமான — இடம்என்று விரைவில் முடிவு எடுக்கப்படவிருப்பதாக யாழ். சுகாதார வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை —

இவ்வைத்தியசாலைக் கட்டடத்தை நிறுவுவதற்கான நிதியை வழங்கி உதவுவதற்கு யாழ். மாவட்ட எம்.பியும், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயமுமான டக்ளஸ் தேவானந்தா, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டப் பிரிவினர் ஆகியோர் முன்வந்திருப்பதாக அறியவருகின்றது.

## குருநகர் இறைச்சிக் கடையை சந்தையுடன் சேர்க்கக்கோரிக்கை

குருநகர், மார்ச் 13

குருநகர் கடற்கரை வீதியில் உள்ள இறைச்சிக் கடையை குருநகர் சின்னக்கடைப் பொதுச் சந்தையுடன் இணைக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாநகரசபை ஆணையாளரை குருநகர் வர்த்தகர் சங்கம் கேட்டுள்ளது.

யாழ். மாநகரசபை ஆணையாளருக்கும் குருநகர் வர்த்தகர் சங்கத்தினருக்குமிடையேயான சந்திப்பு இம் மாதம் 3 ஆம் திகதி யாழ். மாநகர சபையில் நடைபெற்றது. குருநகர் வர்த்தகர் சங்கத்தின் சார்பில் இச்சங்கத்தின் தலைவர் செ. அல்போன்ஸ், செயலாளர் நா. பிரபாகரன், பொருளாளர் அ. ஜெஸ்ரின் ஆகியோர் கலந்து கொண்டார்கள். இச்சந்திப்பில் மேற்கூறிய கோரிக்கை விடுக்கப்பட்டது. குருநகர் சின்னக்கடைப் பொதுச் சந்தையைச் சூழவுள்ள பாதையில் வைத்து வியாபாரம் செய்வதை தடை செய்வதுடன் அவர்களுக்கு சின்னக்கடைப் பொதுச் சந்தையினுள் வியாபாரம் செய்ய இடம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையும் முன் வைக்கப்பட்டது. இவ் விரு கோரிக்கைகளுக்கும் சாதகமான பதில் யாழ். மாநகர சபை ஆணையாளரிடமிருந்து கிடைக்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாக குருநகர் வர்த்தகர் சங்கம் தெரிவித்தது. (ஐ-51)

## பொதுசன மாதாந்த உதவிப் பணம்

நெல்லியடி, மார்ச் 13

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் ஜனவரி, பெப்ரவரி ஆகிய இருமாதங்களுக்கான அரசின் பொதுசன மாதாந்த உதவிப் பணம், அவ்வப்பகுதி தபாலகங்கள் மூலம் கடந்த புதன்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டு வருவதாக, சமூக சேவை உத்தியோகத்தர் என். தர்மலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-109)

### தென்மராட்சியில்

## நடமாடும் செயலக சேவை மிருசுவிலில் நடைபெறும்

கொழும்புத்துறை, மார்ச் 13

தென்மராட்சிப் பிரிவில் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் நடமாடும் செயலக சேவை நடைபெறும்.

இச் சேவை பின்வரும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்காக நடைபெறும்.

எழுதுமட்டுவாள் தெற்கு, எழுதுமட்டுவாள் வடக்கு, மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள பொதுமக்களால் முன்வைக்கப்படும் பிரச்சினைகள், தேவைகளை ஆராய்வதற்காக அன்றைய தினம் இச் சேவை நடத்தப்படவுள்ளது.

இதேபோன்று ஒவ்வொரு மாதமும் இந்த நடமாடும் சேவையை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தென்மராட்சிப் பிரதேசச் செயலர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார். (ஐ-30)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு இவ்வருடம் 200 பேருக்கு அனுமதி

திருநெல்வேலி, மார்ச் 13

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இவ்வருடம் பயிற்சி பெறுவதற்கு 200 பேர் அனுமதிக்கப்படவுள்ளனர். இப்பயிற்சிக்கு விண்ணப்பித்த கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கான நேர் முகப் பரீட்சை வவுனியாவில் எதிர் வரும் 20ஆம் திகதி நடத்தப்படும்.

இதேவேளை—

யாழ். மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கு இம்மாத இறுதிக்குள் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நேர்முகப் பரீட்சை நடைபெற விருப்பதாக கலாசாலை அதிபர் மு.பரம்சோதி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள கல்வி அமைச்சின் ஆசிரிய கல்வி நிர்வாகக் கிளையின் கல்விப் பணிப்பாளரினால் நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் விண்ணப்பித்தவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)


## இரண்டாம் மாத நினைவலைகள்

2000 — 03 — 13

அமரர்

**கிளாரம்மா அற்புதமலர் பேரம்பலம்**
[ஆசிரியை]

தோற்றம் 10 — 11 — 1943 மறைவு 13 — 01 — 2000

எமது வித்தியாலயத்தில் அளப்பரிய சேவையாற்றிய சேவைச் செம்மலே! என்றென்றும் உங்கள் நினைவு எம்மை விட்டகலாது.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,

யா / சென். யோசப் வித்தியாலயம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(சி/11381)


## தேவாரத்திரட்டு முற்றோதல்

அரியாலை, மார்ச் 13

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம்பெறும்.

நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஆசியுடன் இந்த நிகழ்வு நடைபெறும். (ஐ-17)

### வடமராட்சி கிழக்கில்

## மீன்பிடிக்கச் செல்லும் நேரத்தில் மாற்றம்

தென்மராட்சி, மார்ச் 13

வடமராட்சி கிழக்குப்பகுதி கடலில் மீன்பிடிக்கச் செல்லும் நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த பத்தாம் திகதி தொடக்கம் காலை 5.00 மணிக்குப் பின்னரே கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னர் அதிகாலை நான்கு மணி தொடக்கம் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் கடந்த வாரம் இரவு 10.00 மணிக்கு மீன் பிடிக்கச் சென்ற சிலர் படையினரால் தடுத்து வைக்கப்பட்டதையடுத்தே நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். (ஐ-117)

# விளையாட்டரங்கு

## இலங்கை - பாகிஸ்தான் ஆட்டம்

# நான்கு விக்கெட்டுக்களை முரளிதரன் கைப்பற்றினார்

கராச்சி,மார்ச்13

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் கராச்சியில் நடைபெற்றுவரும் மூன்றாவதும் இறுதியுமான ரெஸ்ற்றின் ஆரம்ப நாளான நேற்று ஆட்ட நேர இறுதியில் இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 10 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முன்னதாக துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் 256 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இன்ஸமாம் 86 ஓட்டங்களையும் சஹீட் அப்றிடி 74 ஓட்டங்களையும் அடித்தனர். முத்தையா முரளிதரன் நான்கு விக்கெட்டுக்களையும், சமிந்த வாஸ் 2 விக்கெட்டுக்களையும், புஷ்பகுமார, சனத் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்து ஆடிய இலங்கை அணியினர் முதல் இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் சனத் - அத்தப்பத்து இணை 10 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

(இ-3-8)

# ஆஸி.அணிக்கு 114 ஓட்டங்கள்

வெலிங்டன்,மார்ச்13

ஆஸ்திரேலிய-நியூஸிலாந்து அணிகளுக்கு இடையில் நியூஸிலாந்தில் நடைபெறும் முதலாவது ரெஸ்ற்றில் இரண்டாவது நாளான நேற்று ஆட்ட நேர இறுதியில் ஆஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

முன்னதாக தனது முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி 163 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அஸ்ட்லே 31 ஓட்டங்களையும், கெய்ன்ஸ் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது.

ஜஸ்டின் லங்கர் 47 ஓட்டங்களை அடித்தார். டானியல் விட்டோரி 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 214 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

(இ-3-8)

# இந்தியா 6 விக்கெட்டுகளால் வெற்றி

ஜாம்ஷெட்பூர்,மார்ச்13

இந்தியா - தென்ஆபிரிக்க அணிகளுக்கு இடையில் நேற்று ஜாம்ஷெட்பூரில் இடம்பெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்து ஆடிய தென்ஆபிரிக்க அணி 47.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றது. அணித்தலைவர் ஹன்ஸி குரோன்ஞே 71 ஓட்டங்களை அடித்தார். சுனில்ஜோஷி 4 விக்கெட்டுக்களையும் அஜித் அகர்கர் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்து ஆடிய இந்திய அணி 47.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. அணித்தலைவர் சௌரவ் கங்குலி ஆட்டமிழக்காமல் 105 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்திய அணி ஒருநாள் ஆட்டத்தொடரில் 2-0 என்ற அடிப்படையில் முன்னணியில் உள்ளது.

(இ-3-8)

# இறுதியாட்டங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்13

யாழ் கல்விவலய யாழ். கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று பி.ப. 2 மணிக்கு கனகரத்தினம் ம.ம.வி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த இறுதி ஆட்டங்களில் 15 வயது, 17 வயது, 19வயது ஆகிய மூன்றுபிரிவுகளிலும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியும் மோதவுள்ளன.

(ஐ-3-4)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்13

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வந்த வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

### 15 வயதுப்பிரிவு

★ இடைக்காடு ம.வி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி.

### 17 வயதுப்பிரிவு

★ அத்தியார் இந்து எதிர் சோமஸ்கந்தா.

### 19 வயதுப்பிரிவு

★ சோமஸ்கந்தா எதிர் இடைக்காடு ம.வி.

17 வயதுப்பிரிவில் 3ஆம் இடத்துக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அணியும் இடைக்காடு ம.வி. அணியும் மோதுகின்றன.

* * *

தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலயமட்ட கிரிக்கெட், கரப்பந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டிகள் எதிர்வரும் 16ஆம் திகதி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

நெடுந்தீவு, வேலணை மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய கல்விக்கோட்ட ரீதியாக நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகள் இதில் பங்குபற்றவுள்ளன.

இறுதிப் போட்டி நிகழ்வுகள் தீவகவலயத்தைச் சேர்ந்த உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் நடைபெறும். இதில் வேலணை உதவி அரசாங்க அதிபர் எஸ். இரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நாளையும், நாளைமறுதினமும் இறுதிப் போட்டிகளுக்கு அணிகளைத் தெரிவு செய்வதற்கான ஆரம்பப்போட்டிகள் நடைபெறும்.

தீவக வலய உடற்கல்விக்குப் பொறுப்பான உதவிக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.ஏ ஒஸ்வோல்ட் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்புச் செய்வார்.

(3-7)

## ஹொக்கி

யாழ்.மாவட்டத்தில் உள்ள கழகங்களுக் கிடையிலான ஹொக்கிச் சுற்றுப்போட்டி யாழ். இந்து மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றது.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணிக்கு - உடற்கல்வி வி.க எதிர் பற்றீஸியன் வி.க.

★ பிற்பகல் 4.30 மணிக்கு - பல்கலைக்கழக 'கோல்ட்'அணி எதிர் கே.ஸி.ஸி.ஸி அணி.

## கரப்பந்தாட்டம்

வலிகாமம் கல்விவலயப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 1.30மணி முதல் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

### 17 வயதுப்பிரிவு

★ மகாஜனா எதிர் வட்டு மத்திய கல்லூரி.

★ ஆனைக்கோட்டை பால சுப்பிரமணியம் வித்தி. எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

★ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை எதிர் சுன்னாகம் ஸ்கந்தா.

★ சுழிபுரம் விக்ரோறியா எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தி.

### 19 வயதுப்பிரிவு

★ சண்டிலிப்பாய் இந்து எதிர் மகாஜனா.

★ இணுவில் மத்திய கல்லூரி எதிர் புனித கென்றியரசர் கல்லூரி.

★ மயிலணி சைவ மகாவித்தி. எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.

★ இணுவில் இந்து எதிர் மல்லாகம் மகா வித்தி.

## வலைப்பந்தாட்டம்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்று வரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 1.30மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

### 15 வயதுப்பிரிவு

★ சுழிபுரம் விக்ரோறியா எதிர் சுன்னாகம் ஸ்கந்தா

### 17 வயதுப்பிரிவு

★ வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி எதிர் சுன்னாகம் ஸ்கந்தா.

★ மகாஜன எதிர் உடுவில் மகளிர் கல்லூரி.

★ யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் மல்லாகம் குளமங்கால் றோ.க.த.க. பாடசாலை.

### 19 வயதுப்பிரிவு

★ சுன்னாகம் ஸ்கந்தா எதிர் யூனியன்.

★ மல்லாகம் ம.வித்தி. எதிர் சண்டிலிப்பாய் இந்து.

## மெய்வல்லுநர் போட்டி

யாழ். சென் சாள்ஸ் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி பி.எவ்.சின்னத்துரை தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.


**புலமைப்பரிசில் 2000**

05-03-2000 அன்று நடைபெற்ற பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றோர்:

| | |
|---|---|
| ச.லக்ஷிகா - யா.இ.ஆ.பா. | 161 |
| ம.லக்ஷன் - | 157 |
| கு.யோகானந்தி - யா.ஆ.மெ.மி.பா. | 150 |
| கை.தனுஷன் - பரி. கல்லூரி. | 150 |
| யோ.ரஜீகன் - யா.இ.ஆ.பா. | 149 |
| த.சுவாஸ்கர் - யா.கொ.இ.ஆ.பா. | 148 |
| சி.ஆதிரையன் - | 147 |
| க.கஜனன் - | 142 |
| அ.டினேஷ் - யா.இ.ஆ.பா. | 142 |
| த.திவாகர் - பரி. கல்லூரி. | 140 |

BOND யாழ்நகர். (74432)

தங்க நாணயம் உங்களுக்கே!

இன்று வெளிவர இருக்கும் சினிமா ஹிட் பாடல்கள் பாகம் II இல் தங்க நாணயம் பரிசாகக் காத்திருக்கிறது. விவரம் யாவும் சினிமா ஹிட் பாடல் புத்தகத்தில் அறியுங்கள்.

விநியோகஸ்தர்
S.K.பிரபாகரன்
ஆனைக்கோட்டை. (74428)


## மாணவர் மத்தியில்

# போதைப் பொருள் ஒழிப்பை வலியுறுத்த பல போட்டிகள்

வலிகாமம தெற்கு,மார்ச்13

போதைப்பொருள பாவனையை ஊக்குவிக்கும் சாதனங்களை இனங்கண்டு போதைப்பொருள் தவிர்ப்பிற்கான மனப்பாங்கினை மாணவரிடையே வளரச்செய்யும் நோக்கத்துடன் 'மதியை வளர்ப்போம்; மதுவை ஒழிப்போம்' என்ற தொனிப் பொருளில் நாடளாவியரீதியில் பாடசாலை மாணவர்களுக்கிடையே பல போட்டிகளை நடத்திச் சிறப்பான வெகுமதிப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கக் கல்வி, உயர் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

போதைப்பொருள் தடுப்புக் கல்வி பற்றிய கட்டுரைப் போட்டி, சிறுகதைப்போட்டி, பேச்சுப்போட்டி, சுவரொட்டிச் சித்திரப் போட்டி, நாடகப்போட்டி என்பனவற்றை நாடளாவிய ரீதியில் கல்வி அமைச்சு நடத்தவுள்ளது.

தேசிய மட்டத்திலான சகல வெற்றியாளர்களுக்கும் ரொக்கப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். அத்துடன் ஒவ்வொரு போட்டிப் பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்ட வெற்றியாளர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களுக்கு முறையே 1,500, 1,000, 500 ரூபா ரொக்கப் பரிசும் மதிப்பீட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

சிறுகதை, கட்டுரை, சுவரொட்டி சித்திர, பேச்சுப்போட்டிகள் பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களின் பெயர்கள் வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கு ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்பாகவும் -

வலய மட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களின் பெயர்கள் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் மாகாணக் கல்விப்பணிப்பாளருக்கும் -

மாகாண மட்டத்தில் போட்டிகளை நடத்தி முதல் ஐந்து இடங்களைப் பெறுபவர்களின் பெயர் விவரங்களை ஓகஸ்ட் 10 ஆம் திகதிக்கு முன்பாகக் கல்வி, உயர்கல்வி அமைச்சின் பாடவிதான கல்விப்பணிப்பாளருக்கும -

அனுப்பிவைக்க வேண்டும் என கல்வி உயர்கல்வி அமைச்சுச் செயலாளர் ஏ.அன்றூடி

(12 ஆம் பக்கம் பார்க்க)




(74431)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 - 04 - 1944 | 12 - 02 - 2000 |

## அமரர் செல்லர் கந்தசாமி

இன்று (13.03.2000) திங்கட்கிழமை நடைபெறுகின்ற அன்னாரின் வீட்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் வாடும்
*மனைவி அன்னம்மா,*
*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*

*கற்பகப் பிள்ளையார் வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

(C/11384)

# மரண அறிவித்தல்

## ஞானி சின்னத்தம்பி பாக்கியநாதர்

பலாலியைச் சேர்ந்த ஞானி சின்னத்தம்பி பாக்கியநாதர் நேற்று (12.03.2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மரியநாயகியின் அன்புக் கணவரும் புஸ்பமலர், காலஞ்சென்றவர்களான பீலிக்ஸ், யோசப் மற்றும் ஞானேஸ்வரி, றோசலீன், அருட்சகோதரி பெனிற்றா (திருச்சிலுவை கன்னியர் மடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இம்மானுவேல், காலஞ்சென்ற கமலராணி, சின்னராஜா அன்ரன், ஜெயராஜா ஆகியோரின் மாமனாரும் ஜெரோம், அல்வீனஸ், வலன்ரீனா, விக்ரோ-சாள்ஸ், பரீனா-எட்மன் ரெஜீஸ், கொன்ஸ்ரன்ரைன், அமலராஜ், விமலராஜ், கமலராஜ், நிமலராஜ், மகிமைராஜ், ரோகினி-ஜெயரட்ணம், எரீன், சியோ, ஹர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.03.2000) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அடைக்கலநாயகி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.இம்மானுவேல்
(மருமகன்)

தற்போதைய முகவரி:
*இல. 625/6, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(74430)

# சிவில் நிர்வாகத்தை மீள ஏற்படுத்தும் முயற்சிக்கு படை ஒத்துழைப்பு இல்லை

## நாடாளுமன்றத்தில் ஜெகன் உரை

"குடாநாட்டில் எமது கட்டுப்பாட்டில் உள்ள பத்துப் பிரதேச சபைகள் மூலம் சிவில் நிர்வாகத்தைக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம். ஆனால் அந்த முயற்சிகளுக்கு இராணுவமோ, கடற்படையினரோ, பொலீஸாரோ ஒத்துழைப்புத் தருவதில்லை."

ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.குகேந்திரன் (ஜெகன்) மேற்கண்டவாறு நாடாளுமன்றத்தில் வெள்ளி அன்று தெரிவித்தார்.

அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யாழ். நீரேரியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தினர். அது சம்பந்தமாக உடனடியாக கடற்படை அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்தோம். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அத்துடன் யாழ். மீனவர்கள் பிளாஸ்டிக் படகுகளில் சென்று மீன்பிடிக்கவும் தடைசெய்யப்பட்டுள்ளது. மன்னார்முதல் நெடுந்தீவு வரையான கடற்பகுதியில் பிளாஸ்டிக் படகுகளில் மீன்பிடிக்க அனுமதித்துள்ள அரசு யாழ்.மீனவர்களை ஓரவஞ்சமாக நடத்துகின்றது.

புங்குடுதீவில் சாரதாம்பாள் என்னும் இளம்பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

கடற்படையினராலேயே இந்தச் செயல் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டது. ஆனால் அச் சம்பவம் நடந்து மூன்றுமாதம் கழித்தும் அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதேசமயம் எமது கட்சி உறுப்பினர்கள் கடற்படையினரால் இம்சிக்கப்படுகின்றனர். முகாம் அமைத்துச் செயற்பட இடமளிக்கிறார்களில்லை. நாம் அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களிப்பது தான் இதற்கு காரணமா?

1977ஆம் ஆண்டு சயனைட் உட்கொண்டு மரணமான சிவகுமாரனுக்கு விடுதலைப் போராளி என்ற நோக்கத்தில் சிலையமைக்க முடிவு செய்தோம். வலி - கிழக்குப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றியிருந்தோம். இந்தச்சிலையை நிறுவ வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரிடம் அனுமதி பெற்றிருந்தோம்.

ஆனால் இந்தச் சிலையை அமைக்க இராணுவம் தடை விதித்துள்ளது. இது நியாயமா?

குடாநாட்டில் 10 பிரதேச சபைகளை நிர்வகிக்கிறோம். அவற்றின் மூலம் சிவில் நிர்வாகத்தைக் கொண்டுவர முயற்சிக்கிறோம்.

இந்த சபைகளின் ஏழு உறுப்பினர்களின் உயிரைப் பறிகொடுத்தும் கூட குடாநாட்டில் சிவில் நிர்வாகத்தைக் கொண்டுவர நாம் தொடர்ந்து முயற்சிக்கிறோம். ஆனால் இது விடயத்தில் எமக்கு இராணுவமோ, கடற்படையினரோ, பொலீஸோ ஆதரவு தருவதில்லை என்றார். (உ-3)

# அரசின் முக்கிய தலைவர்களுக்கு குண்டு துளைக்காத நவீன வாகனம்

அரசின் முக்கிய தலைவர்களின் பாவனைக்காக குண்டு துளைக்காத அதிநவீன வசதிகள் கொண்ட 16 வாகனங்களை அரசாங்கம் கொள்வனவு செய்ய விருக்கின்றது.

இந்த வகையான நான்கு வாகனங்கள் ஏற்கனவே கொழும் புக்கு வந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வாகனத்தின் பெறுமதி பத்துக்கோடி ரூபா எனக் கூறப்பட்டது.

அரசின் முக்கிய தலைவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்களை அடுத்தே இந்த வகையான வாகனங்கள் கொள்வனவு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-164)

# இருவர் அடையாளம் காணப்பட்டனர்

மன்னார் - பள்ளிமுனையில் கடந்த ஒக்ரோபர் மாதம் யூடா கமாலிற்றா என்ற இளம்பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இராணுவக் கோப்ரல் ஒருவரும் சாதாரண சிப்பாய் ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தப் படுகொலை சம்பவம் இடம்பெற்று ஐந்து மாதங்கள் கடந்தும் உரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என சம்பந்தப்பட்ட பெண்ணின் உறவினர்கள் கடந்தவாரம் தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்திருந்தனர். தொல்லை தவிர்ப்புக் குழு குற்றப்புலனாய்வுத் பிரிவின் உதவியுடன் மேற்கொண்ட விசாரணைகளின் பேரில் பள்ளிமுனை இராணுவமுகாமைச் சேர்ந்த இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (இ-7)

# குவைத் நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு மேலும் 4,700 பேருக்குக் கிடைக்கும்

கொழும்பு,மார்ச்13

வளைகுடா யுத்தத்தால் வேலையிழந்த மேலும் 4,700 பேருக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு ஐ.நாவின் இழப்பீட்டு ஆணைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

ஜெனிவா சென்றுள்ள தொழில் அமைச்சர் ஜெ.செனவிரத்ன இந்த ஆணைக்குழு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுகளின் போது இணக்க நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இரண்டாம் திகதியில் இருந்து 1991ஆம் ஆண்டு, மார்ச் 2ஆம் திகதி வரையான காலப் பகுதியில் குவைத், ஈராக் ஆகிய நாடுகளை விட்டு வெளியேறி ஜோர்தான், சவூதிஅரேபியா ஆகிய நாடுகளுக்குச் சென்றவர்களுக்கே இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவிருக்கின்றது.

இந்தக் கொடுப்பனவுக்காக நூற்று முப்பது கோடி ரூபா ஒதுக்கப்படவிருக்கிறது.

ஏற்கனவே 85 ஆயிரம் இலங்கையர்கள் இந்த நஷ்டஈட்டை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-க-3)

## பதில் செயலராக பந்துசேன

கொழும்பு,மார்ச்13

கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் பதில்செயலாளராக எம்.டி. பந்துசேன கல்வி, உயர்கல்வி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த பதவியை வகித்து வந்த எஸ்.ஏ.பிரேமரத்ன ஓய்வு பெற்றதை அடுத்தே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-3)

# பயணிகள் கப்பல் சேவைக்கான ஏற்பாடுகளைக் கவனிக்க குழு

## திருமலைக்கு விஜயம் செய்தது

கொழும்பு, மார்ச் 13

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க மேற்கொள்ளவேண்டிய பூர்வாங்க நடவடிக்கைகள் குறித்து ஆராய கப்பல் கூட்டுத்தாபன அதிகாரிகள் குழு ஒன்று திருமலைக்கு விஜயம் செய்துள்ளது.

கப்பல் கூட்டுத்தாபனம் இந்தச் சேவையை நடத்துவதற்காக 'லங்காராணி' என்ற கப்பலை சிங்கப்பூரில் இருந்து கொண்டுவர நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்தச் சேவையை நடத்துவதற்காக திருமலைத் துறைமுகத்திலுள்ள வசதிகளை நேரில் ஆராய்வதற்காகவே கப்பல் கூட்டுத்தாபன அதிகாரிகள் குழு அங்கு சென்றிருந்தது.

துறைமுகத்தில் உள்ள 'சிலோன் ஜெட்டி' இறங்குதுறையை அந்தக் குழு பார்வையிட்டது.

பயணிகள் தங்குமிட வசதிகள், களஞ்சிய வசதி, குடிதண்ணீர் மற்றும் மலசலகூட வசதி ஆகியன தொடர்பாக அந்தக் குழு ஆராய்ந்தது. (இ-3-164)

### பாடசாலைகளில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குக் கொண்டுவந்தனர்.

இதனை அடுத்து சகல மாவட்டங்களுக்குமான படைத்தளபதிகளுடன் இவ்விடயம் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தி முகாம்களை அகற்ற நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்தார்.

வன்னிப் பகுதிப் பாடசாலைகளுக்கு கணனிகளை எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனக் கூறிய ஆளுநர் வன்னி மாணவர்களின் விஞ்ஞான பாட செயன்முறைப் பரீட்சைக்குத் தேவையான இரசாயனப் பொருள்கள் யாவும் நடமாடும் சேவையின் போது அங்கு எடுத்துச் செல்லப்படும் எனவும் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு வழங்கப்படாதிருக்கும் நிலுவைகள் யாவும் இந்த வருட இறுதிக்குள் வழங்கப்பட்டுவிடும் எனவும் -

இலவச பாட நூல் விநியோகம் மற்றும் பாடநூல்களின் தரக்குறைவு ஆகியவற்றுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் -

ஏனைய மாகாணங்களில் கல்வி நிர்வாகத்தில் காணப்படும் நிர்வாகக் கட்டமைப்பு வடக்கு - கிழக்கிலும் கொண்டுவரப்படும் எனவும் -

இதன் மூலம் அதிகாரங்கள் பரவலாக்கப்படும் எனவும் -

ஆளுநர் தன்னைச் சந்தித்த தமிழர் ஆசிரியர் சங்கக் குழுவிடம் தெரிவித்தார்.

ஆளுநர் உடனான சந்திப்பில் தமிழர் ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த த.மகாசிவம், த.பஞ்சலிங்கம், எஸ்.குமரகுருதாஸன் மற்றும் சி.சரவணபவானந்தன், வி.ரி.சகாயதேவராஜா, எஸ்.கணேசராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

### புலி உறுப்பினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மும் விடுதலைப் புலி உறுப்பினருடையது எனத் தெரிவித்தே பொலீஸாரினால் திருகோணமலை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டிருந்து. (இ-7-150 )


# சுனில் ஆட்ஸ்

* Photo Chorome
* Photo Friends
* Acme
*Colour Chorome

நீங்கள் விரும்பும் Colour Labஇல் கழுவிப் பெற்றுக்கொள்ளலாம்.

* 02.03.2000 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கலர் படச்சுருள்களுக்கான படங்கள் வந்துவிட்டன.
* 15.03.2000 அன்று படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும்.

உங்கள் கலர் புகைப்படங்களை நவீன தொழில் நுட்ப முறையில் கழுவிப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

சுனில் ஆட்ஸ்,
272, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/11383)



எமது இன்றைய புதிய வீடியோ வெளியீடு
K.பாலச்சந்தரின்
* காதல் வாங்கி வந்தேன்
* முதல்வன்
நூறாவது நாள் விழா
* முகவரி (C.D)
* முதல்வன் (ஒரிஜினல் C.D)
வாடகைக்கு விடப்படும்.
சுரேன் வீடியோ
140, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(C/11385)



எமது வீடியோ C.D வெளியீடு
அஜித் நடிக்கும்
* முகவரி
ஐங்கரன் ஒரிஜினல் வெளியீடு
இசைத்தென்றல் Vol.44
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C/11386)



இன்றைய வீடியோ C.D. வெளியீடு
* முகவரி
ஜேம்ஸ் பாண்ட் நடித்த
* த வேள்ட் இஸ் நொட் இனவ்
(The World is Not Enough)
பிரதிகளை உடன் பெற்றுக்கொள்ளலாம்.
ஆர்க் வீடியோ லைபிறறி,
அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/11387)


### கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டு வந்த தாக்குதல்களிலும் பார்க்க வித்தியாசமான முறையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாகவே கொழும்பையும் புறநகர்ப்பகுதிகளையும் பாதுகாக்க விசேடதிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஓரிரு தினங்களில் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய, பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு ஆகியோர் பங்குபற்றினர்.

பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ய உயர்மட்டக் குழு ஒன்றை நியமிக்கவும் ஆலோசனை செய்யப்பட்டு வருகின்றது. (இ-க-3-7)

### யுத்தத்தை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

★ நோர்வே அரசு மூலமான மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுக்களை ஊக்கப்படுத்தல்.

★ நீதியான நியாயமான அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். (இ-3-9)

## வருடாந்த திருநாள்

சற்கொட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய வருடாந்த திருநாள் கொண்டாட்டம் கடந்த 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இறுதி நாளான இன்று நவநாள் ஆராதனைகளைத் தொடர்ந்து திருநாள் திருப்பலியும் புனிதரின் திருச்சொரூப ஆசிரும் இடம்பெறவுள்ளன. (இ-30)

### போதைப்....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில்வா அறிவித்துள்ளார்.

பாடசாலை மட்ட நாடகங்களின் கைப்பிரதிகள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் கல்வி, உயர் கல்வி அமைச்சு பாடவிதான கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

மாகாண மட்ட நாடகப் போட்டிகளை ஜூன், ஜூலை மாதங்களில் நடத்தவும் தேசிய மட்டப்போட்டிகளை செப்ரெம்பர் மாதத்தில் நடத்தவும் கல்வி, உயர்கல்வி அமைச்சு உத்தேசித்துள்ளது. (ஐ-152)

### தப்பியோரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் தாக்குதல் நடத்த நியமிக்கப்பட்ட எட்டுப் பேரே உயிரிழந்துள்ளனர். ஏனையோர் தப்பிவிட்டனர்.

அவர்கள் கைதுசெய்யப்பட்டாலேதான் தாக்குதல் தொடர்பான விவரங்களைப் பெறமுடியும். அவர்களைத் தேடி பல இடங்களில் தேடுதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தத் தாக்குதலில் எத்தனை பேர் பங்குபற்றினர், அவர்கள் எங்கிருந்து வந்தனர் போன்ற விவரங்களைப் பெறுவதில் பொலீஸார் தீவிர கவனம் செலுத்துகின்றனர் - இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)


# மரண அறிவித்தல்

## முத்தர் தம்பிஐயா

மூத்தவிநாயகர் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தர் தம்பிஐயா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோதிஅம்மாவின் அன்புக் கணவரும் பவளம்மா, புவனேஸ்வரி, அமிர்தலிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற ஜெயக்குமார், யோகேஸ்வரியின் மாமனாரும் தயாளன், மயூரன், தாரணி, சஜீகரன், பிரசன்னா, தட்சாயினி, தணிகைச்செல்வி ஆகியோரின் பாசமிகு பேரனும் பாக்கியம், காலஞ்சென்ற சின்னத்தம்பி, துரையப்பா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2000) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*30/14, மூத்தவிநாயகர் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
த.அமிர்தலிங்கம்
(மகன்)

(74436)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.